1-7-54

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

16



கேட்டீர்களா!

குறைந்த விலையில் புதிய கார்கள்

அமெரிக்காவில் புது மாடல் கார் ஒன்று தயாரித்து விற்பனை செய்து வருகிறார்கள். இதன் எடை 500 பவுண்டு. இதன் நீளம் எட்டே அடிதான். இதன் பாகங்களை யாரும் மிக எளிதாக ஒன்று சேர்த்துக் காரை உருவாக்கிவிடலாமாம். இந்தக் காரின் விலை என்ன தெரியுமா? 2,700 ரூபாய்தான். அதாவது மற்றச் சாதாரண வண்டிகளின் விலையில் மூன்றில் ஒரு பங்குதான். 'விங் மிட்ஜெட்' என்பதே இந்தப் புதுக் காரின் பெயர்.

அதிசய மருந்து

பிரிட்டனில் ஓர் அதிசய மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிசய மருந்துக்கு எல். எஸ். டி. 25 என்று பெயர். வயதானவர்கள் இந்த மருந்தைச் சாப்பிட்டால் குழந்தைப் பருவத்து நிகழ்ச்சிகள் அவர்கள் நினைவுக்கு வந்துவிடுகிறது. சிறு குழந்தையாகவே தங்களை அவர்கள் நினைத்துக்கொண்டு விடுகிறார்கள். சிறு வயசில் ஓடியாடி விளையாடுவதுபோலவே விளையாடத் தொடங்கிவிடுகிறார்கள். இந்த மருந்தைப் பைத்தியக்கார மருத்துவ விடுதிகளில் உபயோகித்து வருகிறார்கள்.

சுக்கிரனில் ஜீவராசிகள்

நாம் வசிக்கும் இந்தப் பூமியில் சுமார் முப்பதுகோடி வருஷங்களுக்கு முன்பு ஜீவராசிகள் தோன்றினவாம். இதைப் பல வான சாஸ்திரிகள் ஒப்புக்கொள்கிறார்கள். அப்போது இந்தப் பூமியும் இதன் இயற்கை அமைப்பும் எப்படி யிருந்தனவோ அதே நிலையில் இன்று சுக்கிரமண்டலம் இருக்கிறதாம். ஆகையால் எந்தச் சமயத்திலும் அங்கே ஜீவராசிகள் தோன்றலாம் என்று ஒரு ருஷ்ய வானசாஸ்திரி கூறுகிறார்.

இந்தியாவின் குரல்

காந்திஜியின் பிற்பகுதி வாழ்க்கையைச் சித்திரிக்கும் 'இந்தியாவின் குரல்' என்ற செய்திப் படம் சமீபத்தில் உதக மண்டலத்தில் சென்னைக் கவர்னர் தலைமையில் காட்டப்பட்டது. தொடர்ந்து இந்தப் படத்தைத் தென்னாடெங்கும் காட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் படத்தை டைரெக்டர் வி. சாந்தாராம் தயாரித்தாராம். ஒரு மணி நேரம் ஓடும் இந்தப் படத்துக்கு ஸ்ரீமதி மீராபென், பியாரிலால், தேவதாஸ் காந்தி ஆகிய மூவரும் பின்னணி வசனத்தைப் பேசியிருக்கிறார்களாம்.

இரு வங்கச் சிறுவர்கள் சாதனை

கல்கத்தாவைச் சேர்ந்த இரு சிறுவர்கள் மார்ச்சு 21-ஆம் தேதி ஊரைவிட்டுப் புறப்பட்டு மூன்று மாதங்களில் கிட்டத்தட்ட 5000 மைல் நடந்தே பிரயாணம் செய்திருக்கிறார்கள். வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா, மைசூர், ஆந்திரா, சென்னை ஆகிய ராஜ்யங்களில் பிரயாணம் செய்து முடித்துவிட்டார்கள். இனி டில்லி சென்று, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வழியாக லண்டன் போய்ச் சேரத் திட்டமிட்டுள்ளார்கள்.

கண்ணன்

தமிழ்நாடு ... நூலகம்
21791
சென்னை 600 008

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 13
1 - 7 - '54

குழந்தைகளே!	பக்கம் 2
லீடர் மணி	.. 3
ஐம்பது ரோஜாப் பூக்கள்	.. 9
மதிப்புள்ள பொருள்	.. 13
ராணியின் கேஸ்	.. 16
கேளுங்கள், சொல்கிறேன்	.. 21
நல்விரவில்	.. 24
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	27
என்ன உலகம்?	.. 29
சந்திரகிரிக் கோட்டை	.. 33
தூங்கும் அழகி	.. 37
எங்கள் பகுதி	.. 38
கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை	
கண்ணன் கிளைக் கழகம் - மூன்றுவது அட்டை	

வருஷ சந்தா ரூ. 3/-
கலைமகள், கண்ணன், மஞ்சரி
மூன்றும் சேர்ந்த
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

அம்மா, தபால்!

தபால்காரரே! மரத்து மேலே இருந்து கொடுக்கிறீரே, அது ஏர்மெயில் லெட்டரா? இல்லா விட்டால் நாய்க்குப் பயந்து ஏறினீரா?

குழந்தைகளே!

அடுதத பக்கத்தில் புதிய தொடர்கதையான 'லீடர் மணி' ஆரம்பமாகியிருப்பதைக் காண்பீர்கள். படித்துப் பாருங்கள். இந்தக் கதையை உங்கள் இளம் உள்ளங்களில் பெரும் நம்பிக்கை வைத்து அன்புப் பரிசாக வெளியிடுகிறேன். கதையின் ஆரம்பமே வழக்கம்போல் இன்றி, புதுவகையாக இருப்பது தெரியும்.

வெறும் திடுக்கிடும் கதைகளையே படித்துப் படித்து, திடீர்ச் சோதனைகளும் நம்ப முடியாத சம்பவங்களுமே வரவேண்டும் என்று பலர் எதிர்பார்க்கலாம். 'லீடர் மணி' நம் தமிழ்நாட்டுக் கிராமத்தைச் சேர்ந்தவன். தமிழ் நாட்டுச் சிறு நகரம் ஒன்றில் வாழ்பவன். அவன் உங்களைச் சேர்ந்தவன்; உங்களைப் போன்றவன். அவனுடைய ஆசைகளும் அபிலாஷைகளும் உங்களுடையவையேதான். அவனுடைய மனப்போக்கு அவனுடைய சூழ்நிலைக்குத் தகுந்தபடி உருவாகிறது. அந்த மனப்போக்கே அவனை ஆட்டுவிக்கிறது; கதையையும் உருவாக்குகிறது. படிக்கப் படிக்க உங்களுக்குத் தெரிந்த மணி என்ற ஒருவன் உங்கள் மணியே என்பதை நிரூபித்துக் காட்டுவான். நம்ப முடியாத சம்பவங்கள் எதுவும் கதையில் வரவில்லை. அலுப்பைத் தரும் வளர்த்தலும் வர்ணனைகளும் கதையில் இடம் பெறவில்லை. கிராமத்தையும் சிறு நகரம் ஒன்றையும் அடிப்படையாக வைத்து உங்கள் வயதுள்ள சிறுவன் ஒருவனையே கதாநாயகனாக அமைத்து எழுதப் பட்டுள்ள இந்தச் சிறுநாவல் உங்களுக்குப் பலவகையிலும் மகிழ்ச்சியையும் தெம்பையும் ஊட்டும் என்று உறுதியாக நம்புகிறேன். படித்துவிட்டு உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள்.

அடுத்த இதழுக்கு அடுத்த இதழில் 'அருமையான சம்பவம்' என்ற ஒரு சிறு பகுதி ஆரம்பமாகிறது. உங்களுக்குத் தெரிந்த நல்ல சம்பவத்தைப் பற்றி நீங்கள் எழுதலாம். கண்ணனில் சரியாக அரைப் பக்கத்துக்கு வரும்படியாக எழுதினால் போதும். பிரசுரமாகும் சிறந்தவற்றிற்குச் சம்மானம் உண்டு. இந்தப் பகுதிக்கு பதினேழு வயதுக்குட்பட்ட யார் வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் பெரியவர்கள் யாரும் இதில் பங்கு எடுத்துக்கொள்ளக் கூடாது.

கண்ணன் வெளியீடுகள் என்ற வரிசையில் மொத்தம் இது வரையில் 18 புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. எல்லாம் நீங்கள் வாங்கக் கூடிய விலையில்தான் இருக்கின்றன. 12 அணாவுக்கு மேல் விலையில்லை. அழகான படங்களுடன் பிழையின்றி நல்ல காகிதத்தில் அமைந்த புத்தகங்கள். இதற்குத் தனியாக, சின்ன விலைப் பட்டியலும் வெளியிட்டிருக்கிறோம். விலைப்பட்டியலுக்கு எழுதினால் உடனே அனுப்பி வைக்கிறோம்.

—ஆசிரியர்.

லீடர் மணி

'ஆர்வி'

அதிகாலையிலேயே மணி படுக்கையை விட்டு எழுந்திருந்தான். ராத்திரியெல்லாம் என்ன என்னவோ இன்பமும் துன்பமும் கலந்த சொப்பனங்கள். இப்போது அவன் மனசு தெளிவாக இருந்தது; உற்சாகமாகவும் இருந்தது.

'குக்கூ, குக்கூ' என்று தூரத்தில் ஆற்றங்கரை மாந்தோப்பில் குயில் ஒன்று கூவிக்கொண்டிருந்தது. என்ன இனிமை, என்ன இனிமை! வாசலில் இரண்டு மூன்று காக்கைகள், 'கா கா' என்று கரைந்து கொண்டிருந்தன. அதுகூடக் காதுக்கு இன்பமாகத்தான் இருந்தது. அணிற்பிள்ளை ஒன்று 'கிக்கிக்கீ' என்று கத்தியது. வாசல் ஆளோடியில் கட்டியிருந்த பசுங்கன்று, 'அம்..மே' என்று குரல் கொடுத்தது. எங்கிருந்தோ காலையில் பூத்த மலர்களின் வாசனை கம்மென்று காற்றில் கலந்து வந்தது. எல்லாம் தினசரி நடக்கிற காரியந்தான். இருந்தாலும் மணிக்கு அன்று எல்லாம் புதுமையாகவே இருந்தன.

அவன் வாசலுக்கு எழுந்து வந்தான். சூரியன் இன்னும் உதிக்கவில்லை. சண்பகப் பட்சியை அவன் பார்த்ததில்லை. பார்த்திருப்பான்; அதுதான் சண்பகம் என்பது தெரியாது. ஆனால் அது சூரியன் உதிக்கும்போது நல்வரவு கூறுவதுபோல வெகு ஆனந்தமாகப் பாடுவதைக் கேட்டிருக்கிறான். சுறுசுறுப்பாக இருக்கும் கிராமத்தில் சோம்பேறியாக உட்கார்ந்து அது பாடிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும். அதைப்போலத்தான் அவன் மனசும் சந்தோஷமாக இருந்தது. கூடவே ஒரு வருத்தமும் அவன் நெஞ்சில் ஓடிக்கொண்டிருந்தது. இனி இத்தனை நாளும் போல் அவன் இருக்கப் போவதில்லை. இன்று, இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் அவன் பக்கத்திலுள்ள சிறு பட்டணம் ஒன்றுக்குப் போகப் போகிறான். அங்கே போய், அவன் அத்தை வீட்டில் இருந்துகொண்டு, பள்ளியில் படிக்கப் போகிறான். இவ்வளவு நாளும் பிறந்து, வளர்ந்து, விளையாடிய இந்த ஊர் இனிமேல் எப்படி இருக்கும்?

அவன் பல் துலக்குவதற்காக ஆலங்குச்சி ஒன்றை நறுக்கி எடுத்துக் கொண்டு ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான். போகும் வழியெல்லாம் மணல் நிறைந்த பாதை. ஒரு புறம் காட்டாமணக்கு வேலி. அந்த வேலியைத் தாண்டி எவ்வளவு தடவை குதித்து மாங்காய் அடித்துத் தின்றிருக்கிறான்! அந்தத் தோட்டத்துக்குள் மா, பலா, கொய்யா, அரிநெல்லி, நார்த்தை, மாதுளை ஆகிய மரங்களும் இருந்தன. அந்தந்தக் காலங்களில் அந்தந்தக் காய்களும் பழங்களும் நிறையக் கிடைக்கும். அந்தத் தோட்டத்துக்கு எவ்வளவோ கட்டும் காவலும் உண்டு. ஆனால் மணிக்கு அதொன்றும் லட்சியம் இல்லை. அவன் வேலி ஏறிக் குதிப்பது தெரியாது; வெளிவருவது தெரியாது. இந்த இரண்டு காரியத்துக்கும் சௌகரியமாக வேலி ஓரத்தில் இருந்த பாதிரிப் பூ மரம் உதவியது.

மணி அந்த மரத்தடியில் வந்து சிறிது நேரம் நின்றான். மணம் கம்மென்று மனசைக் கவர்ந்துகொண்டிருந்தது. சுண்டு விரல் நீளத்துக்கு இருந்த அந்த ஊதாச் சிவப்புப் புஷ்பங்கள் தேனில் தோய்த்தவைபோல் உதிர்ந்திருந்தன. அந்த மரத்தை அன்புள்ள தோழனைத் தட்டுவதுபோல் தட்டிக் கொடுத்து விட்டு நகர்ந்தான்.

கொஞ்ச தூரத்தில் பெரிய சாலை ஒன்று குறுக்கிட்டது. அதைத் தாண்டினால் ஆறுதான். ஆறு, சாலையோடு வெகு தூரம் இணைந்து போய்க் கொண்டிருந்தது. அவன் படிக்கப் போகிறானே அந்த ஊர் வரைக்கும் அது சாலையை ஒட்டியேதான் போகிறது. அது அவனுக்குத் தெரியும். ஆற்றிலிருந்து பிரிந்து வரும் வாய்க்கால் மதகின்மேல் உட்கார்ந்து மணி பல்லைத் துலக்கிக் கொண்டிருந்தான். அவன் சிந்தனை மட்டும் எங்கோ ஓடிக் கொண்டிருந்தது. அவன் தவழ்ந்து விளையாடிய மணல். அவன் துளைந்து குதித்த ஆற்று நீர். படிக்கட்டு மதகிலிருந்து 'தொமீல் தொமீல்' என்று எத்தனை தடவை அந்தர் அடித்துக் கர்ணம் போட்டிருக்கிறான்! ஊரில் உள்ளவர்கள் எல்லாரும், 'ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இவன் ஆற்றோடு தான் போகப்போகிறான்!' என்பது வரைக்கும் நிச்சயப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். இருந்தால் என்ன? மனோதைரியம் உள்ளவனுக்கு இந்தப் பயம் எல்லாம் ஏது? அவர்கள் சொல்லச் சொல்ல இவன் குதியம் போடுவது அதிகமாகுமே தவிர, குறையாது.

"ஹரே கிருஷ்ண, ஹரே ராம!" என்று பின்னால் சானுப் பாட்டியின் குரல் கேட்டது. மணி திரும்பிப் பார்த்தான்.

"ஏண்டாப்பா மணி, சங்கரபுரம் போப்போறியாமே படிக்க!" என்று சானுப் பாட்டி கேட்டாள்.

"ஆமாம், பாட்டி" என்றான் மணி, எச்சிலைக் கீழே துப்பிவிட்டு.

"என்னமோ அப்பா, உங்க அம்மா இருந்தால் எத்தனையோ சந்தோஷப்படுவாள். அவளுக்குக் கொடுத்து வைக்கலை! உம்..என்ன இருந்தாலும் தாயில்லாப் பிள்ளை தாயில்லாப் பிள்ளைதானே! போய்ச் சேர்ந்து, நன்னாப் படி. சமர்த்தா இரு.." என்று சொல்லிக் கொண்டே பாட்டி ஸ்நானம் செய்யப் போய்விட்டாள்.

மணிக்கு மனசு ஒரு நிமிஷநேரம் ஆடிப் போய்விட்டது. இந்தப் பாட்டியை அவன் என்ன பாடு படுத்தியிருக்கிறான்! எத்தனையோ நாள் அந்தப் பாட்டியின் வீட்டு வாசலில் நாலைந்து பேரோடு போய் ராப்பிச்சை கேட்டிருக்கிறான்! பாவம், அவள் ஏதாவது வீட்டிலிருக்கும் மிச்சம் மீதியை எடுத்துக்கொண்டு வரும்போது, 'ஹோ ஹோ ஹோ!' என்று கும்மாளச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே ஓடிவிடுவான்.

"அட பசங்களா! நான் நிஜப் பிச்சைக்காரன்தானுக்கும்னு நினைச்சேனே!" என்று ஏமாந்து போவாள் பாட்டி. ஒரு நாள் ஏமாந்த பாட்டி, மறுபடி எங்காவது ஏமாறுவதுண்டா? ஆனால் இந்தப் பாட்டி ஒவ்வொரு சமயமும் ஏமாந்துதான் போவாள்.

'ஆகா, இவளுக்கு எவ்வளவு நல்ல மனசு!'-மணி இவ்விதம் தனக்குள் எண்ணிக்கொண்டான். அவன் கண்ணில் லேசாக ஒரு சொட்டு ஜலம் துளித்தது. அம்மாவின் நினைவு அவனுக்கு அடியோடு கொஞ்ச நாட்களாக மறந்திருந்தது. பார்க்கிறவர்கள் எல்லாரும் அவன் அம்மாவைப் புண்ணியவதி என்றே சொன்னார்கள். இப்பொழுது வந்திருக்கிறாளே சித்தி, இவளை - இவள் எப்பொழுது வந்தாளோ அவனுக்குச் சரியாகத் தெரியாது; அவன் அப்போது நாலு வயசுக் குழந்தை - இவளை எல்லாருமே பொல்லாதவள் என்றார்கள். இவள் பொல்லாதவளாக இல்லாவிட்டால் தாயில்லாப் பிள்ளையை அடிப்பாளா? அம்மாவின் முகம் அவனுக்கு நன்றாக நினைவு இருந்தது. மரணப் படுக்கையில் இருந்தபோது மணியைக் கட்டிக்கொண்டு அவள் அழுதாள். அப்போது அவனுக்கும் அழுகை வந்தது. அதெல்லாம் இப்போது நடந்ததுபோல் நினைவில் இருந்தது. எத்தனையோ முறை அவனை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு நிலாவைக் காட்டி, நாயைக் கூட்டி, அவனுக்குச் சாதம் ஊட்டியிருக்கிறாள். கீழே விழுந்து மோவாயில் காயம்பட்ட வடு கூட அவனுக்கு இப்போதும் இருக்கிறது. அப்போது அவள் துடித்த துடிப்பு! ஆனால் அவன் அப்பா ஒரு மாதிரி. இதெல்லாம் அவருக்கு ரொம்ப அற்ப காரியங்கள். "எலே, இங்கே வாடா!" என்று ஒரு குத்துச் சுண்ணாம்பை எடுத்து அடிபட்ட காயத்தில் அப்பினார்.



"ஐயையோ! குழந்தைக்கு எரியப் போகிறதே!" என்று அம்மா துடியாகத் துடித்தாள்.

அவர் காதில் வாங்கிக்கொண்டால்தானே?

சூரியன் உதித்து மள மளவென்று வான் முகட்டில் ஏறத் தொடங்கினான். மணி பல்லைத் தேய்த்து ஸ்நானம் செய்துவிட்டு வீட்டை நோக்கிச் சென்றான். அவன் அருமையிலும் அருமையாக நேசித்த அந்தக் கிராமத்தின் ஒவ்வொரு பொருளும் அமைதியாக அவன் போக்கைக் கவனிப்பது போல் இருந்தது. கணக்குப் பிள்ளை வீட்டு எருமை மாடு கூட தன்னையே நிதானமாகக் கவனிப்பதுபோல் இருந்தது. அதன் முதுகில் ஏறிக்கொண்டு அந்த அல்லிக் குட்டையில் எத்தனை தடவை சவாரி செய்து நீச்சலடித்திருக்கிறான்! 'என்னை விட்டு விட்டு ஊருக்குப் படிக்கப் போகிறாயா?' என்று கேட்பது போல்

இருந்தது அதன் பார்வை. மணி கண்ணை இறுக மூடிக்கொண்டு தட தடவென்று வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

மணி ஒன்பது அடித்தது. மணி அதற்குள் பழையது எல்லாம் சாப்பிட்டு விட்டு, புதிய சட்டை ஒன்றை அணிந்துகொண்டு தயாராக இருந்தான். எப்போதும் சிடு சிடு கடு கடு வென்றிருக்கும் அவனுடைய சித்திகூட இன்று அவன் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தாள்.

அவனுடைய அப்பா வந்தார். கிட்டத் தட்ட நாற்பத்தைந்து வயசிருக்கும் அவருக்கு. எப்படி இருந்த மனுஷன், எப்படி ஆகி விட்டார்! மணிக்கே அவருடைய மாறுதல் நன்றாகத் தெரிந்தது. அவனுடைய அம்மா அவரைக் கண்டாலே நடுங்குவாள். அத்தனை கெடுபிடியாக இருப்பார் அவர். இப்போது—

இப்போது அந்தக் கெடுபிடி யெல்லாம் போன இடம் தெரியவில்லை. என்னவோ அவன் சம்பந்தப் பட்டவரையில் அவர் மாறு விட்டாலும் சித்தி சம்பந்தப்பட்ட வரையில் அடியோடு மாறியிருந்தார். அவளிடம் அவர் ஓங்கிப் பேசி அவன் பார்த்ததே யில்லை. அம்மா பெரும்பாலும் அவர் எதுவும் சொல்லிச் செய்யும்படி வைத்துக் கொள்ளமாட்டாள். ஆனால் சித்தியோ சொன்னாலும் அதன்படி செய்வதேயில்லை. அப்பாவுக்கு வரவேண்டிய கோபமெல்லாம் இப்போது எங்கே போய் ஒளிந்து கொண்டு விட்டது? மணிக்கு இதுதான் ஒரு புறம் ஆச்சரியமாக இருந்தது. அப்பா ஒருவரிடம் மட்டும் பயந்து கொண்டிருந்தது போக, இப்போது சித்தியிடமும் அவன் பயப்படும்படியாகிவிட்டது. சித்தியைக் கண்டு அப்பாவே பயப்படுகிறார் போலிருக்கிறதே!

"ஏண்டா பயலே! புறப்பட எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு விட்டாயாடா?" என்று அப்பா அவனைக் கூப்பிட்டுக் கேட்டார்.

"ஆமாம்பா" என்றான் மணி.

"என்னடா பதில் இது?



எடுத்து வைத்துக்கொண்டு விட்டேன்னு சொல்லமாட்டியோ? 'ஆமாம்பா'வாமே! ஆமாம்பா!" என்று கேலிக் குரலில் கோபித்துக் கொண்டாள் சித்தி.

"சரிதான்" என்றான் மணி.

"திரும்பவும் பாத்தியா? என்ன

சரிதான்! முதல்லே பேசத் தெரியறதோ பார், உனக்கு? எப்படித்தான் போய்ப் படிச்சு, கேட்ட கேள்விக்குச் சரியான பதில் சொல்லி, பாஸ் பண்ணப்போறியோ, தெரியவில்லை! உங்க அப்பாவுக்கு எப்படித்தான் சம்பாதிச்சுப் போடப் போறியோ, தெரியவில்லை! நீ என்னமோ படிச்சுக் கலெக்டர் உத்தியோகம் பார்க்கப் போகிறதாகத்தான் உங்க அப்பாவுக்கு நினைப்பு" என்றான் சித்தி.

மணி இதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் அப்பாவைப் பார்த்தான். 'அப்பா, உன் எதிரிலேயே சித்தி எப்படிப் பேசுகிறாள் என்னை, பார்த்தாயா? என் அம்மா இருந்தால் நான் படிக்கப் போகும் இந்தச் சமயத்தில் எவ்வளவு சந்தோஷமாக எனக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்லியனுப்புவாள்!' என்று சொல்வது போலிருந்தது அந்தப் பார்வை. அவன் அப்பாவோ இதையெல்லாம் மனசில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை.

மூங்கிலடியிலிருந்து சங்கரபுரம் ஐந்தாறு மைல் தூரம்தான் இருந்தது. அதனால் ஊருக்கு நடந்து போவதாகத்தான் திட்டம். அவர்களுக்கு ஏதோ சாப்பாட்டுக்குப் போதுமான ஆஸ்தியிருந்ததே தவிர, வண்டி வசதி ஒன்றும் கிடையாது. மணி தன்னுடைய புஸ்தகம், துணிமணிகளை ஒரு பையில் திணித்து எடுத்துக் கொண்டான்.

அவனுக்குத் திடீரென்று ஒரு நினைவு வந்தது. "அப்பா! இதோ ஒரு நிமிஷம்!" என்று சொல்லி விட்டுத் தெருவில் ஓடினான். ஐந்து வருஷமாக அரிச்சுவடியிலிருந்து ஐந்தாம் வகுப்பு முடிய பாடம் சொல்லிக் கொடுத்த குப்பு வாத்தியாரை மறக்கலாமா? அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் போவதுதான் நியாயமா?

குப்பு வாத்தியார் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். மணி அவர் காலைப் பிடித்துக் கொண்டு நமஸ்காரம் செய்தான்.

"சார்! போயிட்டு வரேன், சார்! ஹைஸ்கூல்லே சேர்ந்து நன்னாப் படிக்கிறேன், சார்!" என்று கண்ணீர் மல்கக் கூறினான். சித்தி பேசிய வார்த்தைகள் அவன் மனத்தை அறுத்துக்கொண்டேயிருந்தன. யாராவது ஒரு வார்த்தை ஆறுதலாக, சந்தோஷமாகச் சொன்னால் தேவலை போலிருந்தது அவனுக்கு. அந்த ஏக்கம் அவன் குரலில் தொனித்தது. நெஞ்சு தழுதழுத்தது.

குப்பு வாத்தியார் வயசானவர்; அநுபவம் உள்ளவர். அவர் அவனை அப்படியே வாரி எடுத்து, "குழந்தை! உனக்கு எல்லா நன்மையும் உண்டாகணும்டா! நீ தீர்க்காயுஸா, நன்னா யிருக்கப்போறேடா!" என்று ஆசீர்வாதம் செய்தார்.

"சரி சார்! நான் வறேன்" என்று சொல்லிவிட்டு மணி தலை தெறிக்க வீட்டுக்கு ஓடி வந்து பையை எடுத்துக்கொண்டான்.

"இருடா மணி! இதை வாங்கிண்டு போ!" என்று சித்தி உள்ளே போய், இரண்டு முறுக்கைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள்.

மணி பதில் பேசாமல் நமஸ்காரம் ஒன்று செய்து விட்டுப் பையை எடுத்துக் கொண்டான். சித்தியைக் கலங்கிய கண்களுடன் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். இன்பமும் துன்பமும் கலந்த பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. குனிந்த தலை நிமிராமல் தந்தையின் பின்னே நடந்தான்.

(தொடரும்)

ஐம்பது ரோஜாப்பூக்கள்

தங்கமணி

"ஆசிரியருக்குப் பிடித்தமான கதைகளை எழுதிச் சம்பாதிக்கும் இன்றைய அடிமை எழுத்தாளர்கள் பலருக்கு நடுவில், தனக்குப் பிடித்த கதைகளை மட்டுமே எழுதி, வெறும் புகழை மட்டும் சம்பாதிக்கும் லட்சிய எழுத்தாளனாக விளங்கினான், கடம்பன்.."

இந்த வரிகளில் ஆங்காங்கே உள்ள ஒரு சில வாக்கியங்களை மட்டும் மீண்டும் மீண்டும் ரசித்துப் படித்துச் சுவைத்தார் பூபாலன். அந்த வாக்கியங்களைப் படிக்கப் படிக்க, அவர் உள்ளம் பூரித்தது; புளகிதம் கொண்டு விம்மியது; அவர் தமக்குத் தாமே ஒரு 'சபாஷ்' போட்டுக் கொண்டார், ஒரு சில சுய விளம்பர எழுத்தாளர்களைப் போல!

பிறகு,—

அந்தக் கதையை அழகாக மடித்தார்; நீளமான காக்கி நிற உறையில் போட்டார்; பிறகு உறையின் ஒரு மூலையில் ஓர் ஓரணா அஞ்சல் தலையை ஒட்டினார்; 'பூ' என்னும் பத்திரிகாலயத்தின் முகவரியை எழுதினார்.

அந்தச் சமயத்தில் அவருடைய தம்பி கனகராஜன் புத்தகப் பையைத் தோளில் மாட்டிக்

கொண்டு, சட்டைக் 'காலரை'த் தூக்கிவிட்டபடி மாடிப் படியில் இறங்கி வந்துகொண் டிருந்தான். பூபாலன், அவனைப் பார்த்து, "அடே, ராஜா! இந்தா, இந்தக் கதையைத் தபாலில் சேர்த்து விடு" என்று கூறிக்கொண்டே உறையை நீட்டினர்.

"கலாசாலைக்கு நேரமாயிற்று அண்ணு"—கனகராஜன் முகத்தைச் சுளித்தான்.

"போகிற போக்கில் அப்படியே போட்டு விட்டுப் போடா என்றால்!" என்று ஓர் அதட்டுப் போட்டார் பூபாலன். கனகராஜன் மேலே ஒன்றும் பேசவில்லை; முப்பது கோணல்களாக்கிக் கொண்டு, மனத்திற்குள்ளேயே என்னவோ முணுமுணுத்துக் கொண்டே வந்தான்; கதையை வாங்கிக்கொண்டு 'விர்'ரென்று வெளியே கிளம்பினான்.

கோடிக்கரை கோபாலையங்கார் வீட்டு வேலைக்காரப் பையன் குப்பன், காய்கறியும் கையுமாக எதிரில் வந்துகொண் டிருப்பதைக் கண்டான். கண்டதும் நின்றான். "அடே, குப்பா!" என்று கூவி அழைத்துக்கொண்டே அவனிடம் சென்றான். "கலாசாலைக்குப் போக நேரமாகி விட்டது. சாயந்தரம் வந்ததும் காபிக் கடைக்குப் போகலாம். இந்தா, இதைப் போகிற போக்கில் போட்டுவிடு" என்று கூறியபடியே உறையை அவனிடம் கொடுத்துவிட்டு விர்ரென்று கிளம்பிப் போய்விட்டான்! கதையைப் பெற்றுக் கொண்ட குப்பன், பரக்கப் பரக்க விழித்தான்!

ஏன்....?

ஏதேனும் சூழ்ச்சி...

ஒரு நாளாயிற்று; இரண்டு நாட்களாயின; ஒரு வாரமாயிற்று; இரண்டு வாரங்களாயின! பூபாலன் அனுப்பிய கதையைப் பற்றி, 'பூ' பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து ஒரு பொட்டுத் தகவலும் கிடைக்கக் காணோம்!

பூபாலன், அன்றே வணக்கத்துடன், மனங்கலங்கும் வருத்தத்துடன், 'பூ' பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினர். ஒரு வாரம் கழித்து இன்னொரு கடிதம் எழுதினர். இரண்டு வாரம் கழித்து மற்றொரு கடிதம் எழுதினர். மூன்றுவது வாரத்தில் இன்னொன்று. இத்தனை கடிதங்கள் எழுதியும்..

ஒரு பதிலும் காணோம்;

ஏதாவது சொன்னாலும் கோபம் வந்து விடும்! ஏதவும் சொல்லாமலிருந்தாலும் கோபம் வந்து விடும்! இன்றைய இரண்டுங் கெட்டான் உலகத்தைச் சேர்ந்த பூபாலனுக்குப் 'புர்ர்ர்..' ரென்று பொல்லாத கோபம் பொங்கிக்கொண்டு வந்து விட்டது. அந்தப் பொல்லாத கோபத்துடன் நேரே 'பூ' காரியாலயத்திற்கு வந்தார். அவர் கிளம்பி வந்த வேளை, என்ன வேளையோ..?

ஆசிரியரைக் காணோம்!

மறுநாளும் வந்தார்.

அன்று, அவர் கிளம்பும் போது எந்தச் சனியன் எதிரில் வந்ததோ ..அல்லது குறுக்கில் தான் வந்ததோ?...

அன்று ஆசிரியர் இருந்தார்; ஆனல் பூபாலன் வந்த அடுத்த விநாடியே, "அவசரம், சந்தர்ப்பமில்லை!" என்று சோக்கராப் பையனிடம் சொல்லச் சொல்லி

விட்டு, காரில் ஏறிக் கொண்டு காற்ருய்ப் பறந்து போய்விட்டார்!

பூபாலன் சளைக்கவில்லை; அடுத்த நாளும் விடாப்பிடியாக வந்தார். இன்று ஆசிரியர் இருந்தார்; அமர்ந்து பேசவும் சந்தர்ப்பம் கிடைத்தது! ஆனல்..

"உங்கள் கதை இன்று வரைக்கும் நம்முடைய காரியாலயத்தை எட்டிக் கூடப் பார்க்கவில்லை!"—தன் கதையைப்பற்றி விசாரித்த பூபாலனுக்கு ஆசிரியரிடமிருந்து இந்தப் பதில்தான் கிடைத்தது!

பூபாலன் மனம் புழுங்கிக் கொண்டே அங்கிருந்து கிளம்பினர். 'தபாலில்தானே அனுப்பினேம்! எப்படி வந்து சேராமல் போயிருக்கும்?..தபால் தலையும் தவருமல் ஒட்டினேம். முகவரியும் பிழையின்றி முத்து முத்தாக எழுதினேம். பின் எப்படித்தான், ஒரு வேளை நம் தம்பி கனகராஜன்—' என்னென்னவோ எண்ணியபடியே வீட்டை நோக்கி விரைந்தோடி வந்தார். பால்கனியில் படித்துக் கொண்டிருந்த கனகராஜனைக் கூப்பிட்டார்.

"அடே ராஜா, அன்றைக்குக் கதை கொடுத்து அனுப்பினேனே.."

"எப்போது அண்ணு..?"

"சுமார், இரண்டு இரண்டரை மாதங்களுக்கு முன்னே, தபாலில் சேர்த்துவிடும்படிக் கொடுத்து அனுப்பினேனே, அதைத் தபாலில் சேர்த்தாயா, இல்லையா?.."

"கலாசாலைக்குச் செல்லும் போது கொடுத்தனுப்பினீரே, அதுதானே?....ஓ....சேர்த்து விட்டேனே!..." என்று பலமாகத் தலையை ஆட்டிக் கொண்டே கூறினன், கனகராஜன்.

"உண்மையாகவா?" என்று அழுத்தமாய்க் கேட்டார், பூபாலன். எள்ளும் கொள்ளும் வெடிக்கும் அவர் முகத்தைக் கவனித்த கனகராஜனுக்கு மனத்தை என்னவோ பண்ணியது. "இல்லை, அண்ணு.." என்று ஆரம்பித்து அவன்

உண்மையைக் கக்க ஆரம்பித்தான்.

"வந்து....அன்று....கலாசாலைக்கு நேரமாகிவிடுமே என்று பயந்துகொண்டு எதிரில் வந்த குப்பனிடம் கொடுத்துத் தபாலில் சேர்த்துவிடும்படி சொல்லிவிட்டு நான் போய்விட்டேன், அண்ணா."

"எந்தக் குப்பன்..?"

"கோடிக்கரை கோபாலையங்கார் வீட்டு வேலைக்காரப் பையன்.."

"சரி, அவனைப் போய்க் கூட்டிக்கொண்டு ஓடிவா!.."

கனகராஜன் ஓடோடிச் சென்று குப்பனுடன் வந்தான்!

பூபாலன் அவனை விசாரித்தார். குப்பன் சொன்னான்:

"அன்றைக்கு, என்னிடம் கதையைக் கொடுத்தது என்னவோ உண்மைதான்; 'போட்டு விடு' என்று சொன்னதும் உண்மைதான்; ஆனால்..எங்கே, எதிலே போடவேண்டும் என்று சொல்லாமல் ஓடிப் போனால்..நான் எங்கே கொண்டு போட்டுத் தொலைப்பது? நான், கனகராஜன் கொடுத்ததை அப்படியே பத்திரமாய் வீட்டுத் தோட்டத்தில் ஒரு மரக் கிளையில் வைத்திருந்தேன். ஒரு நாள்......எந்தக் கழுதையோ....அந்தக் காகிதக் கற்றையை விழுங்கித் தொலைத்து விட்டது....!" படிப்பு வாசனையற்ற அந்தப் பட்டிக்காட்டுக் குப்பன் கூறிய விஷயத்தைக் கேட்டதும், பூபாலன் ஸ்தம்பித்துப் போனார்! அவருக்கு இந்த ஈரேழு பதினான்கு உலகமும் ,கிறு..கிறு..கிறு' வென்று சுற்றிச் சுழலுவதைப் போன்றிருந்தது! தன்னை நம்பி தன்னிடம் தந்த வேலையைத் தானே செய்யாமல் மற்றவனை நம்பி மோசம் போன தவற்றை உணர்ந்த கனகராஜன் தன் அண்ணனைக் கண்டு கதிகலங்கினான்; கல்லாய்ச் சமைந்து நின்றான்! அவன் தன் அண்ணன் தன்னை 'ஒரு கை பார்ப்பார்' என்றுதான் நினைத்தான்; ஆனால்...நினைத்தது நடக்கவில்லை!

"..சுற்றி வளைத்துப் பார்க்கப் போனால்..எல்லாம் நம்முடைய குற்றந்தான்..!" என்று உணர்ந்தது ஒருபுறமிருக்க—அந்தச் சமயத்தில் பூபாலன் உள்ளத்தில் 'பிறர் குற்றத்தை ஒருவன் மன்னித்தால் அந்த ஒருவன் குற்றத்தைக் கடவுள் மன்னிப்பான்..' என்ற ஏசு மகானின் பொன் மொழியும் மின்னி மறைந்தது. ஆதலால், அவர் தம் மனத்தைச் சாந்தப் படுத்திக்கொண்டு..

"டேய் ராஜா, நீ போய்ப் படி.."

கனகராஜன் போய்விட்டான்.

"டேய் குப்பா, நீயும் போ.."

குப்பன் ஓடிப் போனான்.

பிறகு—அநியாயமாய் அழிந்த தமது அருமையான கதையை நினைத்து நெஞ்சம் உருகிக் கொண்டே பூபாலன் மேல்மாடிக்குச் சென்றார்; தமது அறைக்குள் நுழைந்தார்; சாய்வு நாற்காலில் தொப்பென்று வீழ்ந்து சாய்ந்தார்; அவர் மனக்கண் முன் அவருடைய அந்தக் கதை காட்சியளித்து, அவர் மனத்தை இன்னமும் வேதனைக் குள்ளாக்கி விட்டு மறைந்தது! அந்தக் கதையின் பெயர்தான்—

'ஐம்பது ரோஜாப் பூக்கள்!'

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்லவேண்டும் என்பதே பேராசிரியர் விஞ்ஞானத்தின் கருத்து. உங்களை வெறுமே சிரிக்கச் செய்யவேண்டும் என்று விடை சொன்னால், அது பயனுள்ளதாக இராது. உங்களுக்குப் பயன்படவும் வேண்டும்; உங்களைத் திருப்தி செய்யவும் வேண்டும் என்பதே விஞ்ஞானத்தின் நோக்கம். ஆ—ர்]

ஏ. எம். ஷாலிக்,
அன்னூர்.

ரேடியோ வால்வு கண்டுபிடித்தவர் யார்?

இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த பிளெமிங் என்னும் விஞ்ஞானியால் 1904-ஆம் வருஷத்தில் முதன் முதலாக ரேடியோ வால்வு கண்டு பிடித்து அமைக்கப்பட்டது.

எஸ். ஜெயராமன்,
திருவல்லிக்கேணி.

கடலில் ஏன் 'ஓ' என்னும் சத்தம் கேட்கிறது?

காற்று ஏதாவது ஒரு பொருளின்மீது மோதி, அந்தப் பொருளை அசையச் செய்தால், வாயு மண்டலத்தில் அலைவு உண்டாகிறது. அதனால் ஓசை பிறக்கிறது. மேலும் கடற்கரை ஓரத்தில் அலைகள் புரண்டு தரையில் மோதுவதாலும் ஓசை உண்டாகிறது. இவ்விரண்டு காரணங்களால் தான் கடற்கரை ஓரத்தில் 'ஓ' என்று ஓசை கேட்கிறது.

திறந்த வெளிகளில் 'ஓ' என்னும் ஓசையே உண்டாகும்.

டி. ஆர். சந்திரசேகரன்,
ஸ்ரீரங்கம்.

உலகில் இன்னும் எந்த எந்த வியாதிக்கு மருந்து கண்டுபிடிக்கவில்லை?

உலகில் எத்தனையோ வியாதிகளுக்கு இன்னும் உறுதியான மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால் அவற்றை மட்டுப்படுத்துவதற்கான மருந்துகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. உதாரணமாக, கான்ஸர் நோயைச் சொல்லலாம். இதை முற்றுமுன் தடுப்பது எளிது; முற்றியபின் தடுப்பது அரிது.

என். ரமேஷ்,
மேட்டூர் அணை, சேலம்.

நம் இந்தியாவில் அணுக் குண்டு செய்கிறார்களா? ஏன் செய்வதில்லை?

இந்தியாவில் அணுக் குண்டு செய்யவில்லை. அதைச் செய்வதற்கு வேண்டிய பண வசதிகளும் கருவி வசதிகளும் இப்போது நம் நாட்டில் இல்லை.

மேலும் அணுக்குண்டு செய்வதே மிகத் தவறான காரியம் என்பது நம்முடைய அரசியல் வாதிகளின் கொள்கை.

எஸ். ஏ. முத்தலீப்.
சங்காம் பந்தல்.

வானில் நக்ஷத்திரங்கள் எரிந்து விழுவதற்குக் காரணமென்ன?

வானத்திலே, எரிந்து விழுவதைப் போல் தோன்றுபவை நக்ஷத்திரங்கள் அல்ல. அவை விண்வீழ் கொள்ளிகள் எனப்படும்.

வான வெளியிலே மிகச் சிறிய பொருள்கள் கோடிக் கணக்காகத் திரிந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் சில பூமியின் கவர்ச்சியால் இழுக்கப்படுகின்றன. அப்போது அவை பூமியை நெருங்குகின்றன. பூமியை நெருங்க நெருங்க அவைகளின் வேகம் அதிகமாகும். அவை பூமியைச் சுற்றியுள்ள காற்றோடு உராய்கின்றன. அதனால் வெப்பம் ஏற்படுகிறது. அந்த வெப்பத்தில் அவை எரிந்து பிரகாசமாக ஒளி வீசுகின்றன. இந்த ஒளியையே நாம் விண்வீழ் கொள்ளி என்கிறோம்.

ரவிசந்திரன்,
ராஜயோகா பந்தர்கர் ரோடு,
புனா.

சூரியன் ஒரு நக்ஷத்திரமா, அல்லது கிரகமா?

சூரியன் ஒரு நக்ஷத்திரம். அது கிரகம் அன்று. நக்ஷத்திரம் என்பது சுயமாக ஒளி வீசும் இயல்புள்ளது. கிரகத்துக்குச் சுய ஒளி கிடையாது. கிரகம் சூரியனைச் சுற்றி ஓடும் இயல்புள்ளது. நமது சூரியனுக்கு ஒன்பது கிரகங்கள் உண்டு.

என். சிவஞானம்,
சேலம்.

சுருட்டை மயிர் உண்டாக என்ன செய்யவேண்டும்?

சுருட்டை மயிர் சாதாரணமாகப் பிறவியால் ஏற்படுவது. முன்னோர்களின் தன்மைகளை நாம் பெறுவது போல இதையும் பெறுகிறோம்.

ஆனால் செயற்கையாகவும் மயிரைச் சுருளச் செய்யக் கருவிகளும் கண்டுபிடித்துள்ளார்கள். ஆனால் இவற்றால் நிலையான பயன் கிடைக்காது.

சி. ஜ. சௌந்தரராஜன்,
ஓசூர்.

சில சமயங்களில் மழை பெய்யும் போது மின்னலும் இடியும் தோன்றுகின்றன. அப்போது நமக்குக் கிடைப்பது முதலில் ஒளியா அல்லது ஒலியா? ஏன்?

மின்னல், இடி ஆகிய இரண்டும் ஒரே சமயத்தில் உண்டாகின்றன. ஆனால், நாம் ஒளியாகிய மின்னலையே முதலில் காண்கிறோம். அதற்குச் சில நொடிகளுக்குப் பின்பே ஒலியாகிய இடியைக் கேட்கிறோம். இதற்கு அவற்றின் வேகமே காரணம். ஒளி நொடிக்கு 186,000 மைல் வீதம் செல்கிறது. ஒலி நொடிக்கு 1,120 அடி (அதாவது 5 நொடியில் சுமார் 1 மைல்) வீதமே செல்கிறது.

சா. கோவிந்தன்,
எருமைப்பட்டி.

நக்ஷத்திரம் ஏன் பகலில் தெரிவதில்லை?

நக்ஷத்திரங்களும் நமது சூரியனைப் போல் ஒளிவீசும் இயல்புள்ளவை. கிட்டத்தட்ட சூரியனின் அளவே, பொதுவாக உள்ளவை. ஆனால் நக்ஷத்திரங்களைப் பற்றி எண்ணும்போது சூரியன் மிக அருகில் இருக்கிறதே என்று சொல்ல வேண்டும்.

நக்ஷத்திரங்கள் வெகு தூரத்தில் உள்ளதால் அவற்றின் ஒளி சிறிதாகத் தெரிகிறது. அருகில் உள்ள சூரியனின் ஒளி மிகுதியால் அவை கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போகின்றன.

ஆர். பாலசுப்பிரமணியன்,
ராசிபுரம், சேலம்.

உலகத்திலேயே மிகப் பெரிய டெலிஸ்கோப் எங்கே உள்ளது? அதைக் கண்டுபிடித்தவர் யார்?

உலகத்திலேயே மிகப் பெரிய டெலிஸ்கோப் அமெரிக்காவில், காலிபோர்னியாவில் உள்ள பாலோமா மலையில் நிறுவியிருக்கும் நக்ஷத்திர சாலையில் உள்ளது. அதன் ஆடியின் குறுக்களவு 200 அங்குலம்.

அதை அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டு, விடாப்பிடியாய் முயன்றவர் ஹேல் என்னும் வான சாஸ்திரி. அவருடைய ஞாபகார்த்தமாகவே அந்த டெலிஸ்கோப்புக்கு ஹேல் டெலிஸ்கோப் என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

எம். சந்திரசேகரன்,
நாகர்கோயில்.

சந்திர லோகத்தை எந்த விஞ்ஞானியாவது கண்டார்களா? முதன் முதல் யார் கண்டார்? அங்கு மனிதர்கள் வசிக்க முடியுமா? அங்கு ஜீவராசிகள் இருக்கின்றனவா?

சந்திரலோகத்தை இதுவரையிலும் யாரும் நேரில் கண்டதில்லை. ஆனால் அங்கே ஒரு காலத்தில் போகக் கூடும் என்று இக்காலத்து விஞ்ஞானிகள் சிலர் கருதுகிறார்கள்.

ஆனால் டெலிஸ்கோப்புகளின் வழியாகப் பல விஞ்ஞானிகள் சந்திரமண்டலத்தைப் பார்த்திருக்கிறார்கள்.

சந்திரமண்டலம் குளிர்ந்தும் காய்ந்தும் போன உலகம். அதில் வாயுவும் நீரும் இல்லை. அதில் ஜீவராசிகள் ஒன்றும் இருக்க முடியாது என்பதே விஞ்ஞானிகளின் அபிப்பிராயம்.

அதிலே மனிதர்கள் நிச்சயமாக வசிக்க முடியாது.

என். மருதமுத்து,
தொட்டியம்.

ஜுரமானியை ஏன் வெந்நீரில் கழுவக் கூடாது?

உடம்பின் வெப்ப நிலையை அளப்பதற்காகவே ஜுரமானி தயார் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அதில் 95 டிகிரி முதல் 110 டிகிரி வரையிலும்தான் வெப்பத்தை அளக்கும்படி அது அமைந்திருக்கிறது. சூடான வெந்நீரில் ஜுரமானியைக் கழுவினால் அதிலுள்ள பாதரஸம் அதிகமாக விரிவடையும். ஜுரமானி வெடித்துப் போகக்கூடும். ★

ரமணியின் கேஸ்

ராஜன்

துப்பறியும் நிபுணர் ஜயராஜ் தமது ஆபீஸ் அறையில் நின்றுகொண்டு வெளியே எட்டிப் பார்த்தார். தெருவில் வந்து கொண்டிருந்த ஒரு பெண் சட்டென்று அந்தக் கட்டிடத்திற்கு எதிரே நின்றாள். அவளுக்குப் பதினாறு வயசு இருக்கும். பார்ப்பதற்குக் குறுகுறுவென்று இருந்தாள். அவளுடன் வந்துகொண்டிருந்த அந்தப் பையனும் சட்டென்று நின்று, அவளிடம் ஏதோ சொன்னான். உடனே இருவரும் மாடிமேல் ஏறிச் சென்றார்கள்.

ஜயராஜின் அறைக்குள் நுழைந்த அவர்களை அவர் உட்கார வைத்துவிட்டு, "இதோ, இரண்டு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டுக் கீழே இறங்கினார். எதிரே, இரண்டு வீடுகளுக்கு அப்பால் ஓர் ஓரமாக நின்றிருந்த மனிதனுக்கு அருகில் சென்று கபக்கென்று அவனுடைய கையைப் பிடித்து, "யார் நீ? அந்தப் பெண்ணையும் பையனையும் எதற்காகத் தொடர்ந்து வந்தாய்?" என்று கேட்டார்.

"மிஸ்டர் ஜயராஜ்! நான் துப்பறியும் இலாக்காவைச் சேர்ந்தவன். இன்ஸ்பெக்டர் சந்தானம் என்னைக் கூப்பிட்டு, இவர்கள் இருவரையும் தொடர்ந்து சென்று அவர்களுடைய செயல்களைக் கவனிக்குமாறு உத்தரவு போட்டிருக்கிறார். அதனால்தான் அவர்களைத் தொடர்ந்து வந்தேன்!" என்றான் அவன்.

ஜயராஜ் அவனுடைய கையை விட்டு விட்டு, "உன்னுடைய பெயர் என்ன?" என்றார்.

"ஆறுமுகம்."

"விஷயத்தை நான் இன்ஸ்பெக்டர் சந்தானத்திடம் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். நீ போகலாம்" என்று சொல்லிவிட்டு ஜயராஜ் தம் அறையை நோக்கி நடந்தார்.

முதலில் அந்தப் பெண்தான் பேச்சை ஆரம்பித்தாள். "என் பெயர் சுமதி. நானும் அண்ணனும், நாட்டுப்பிள்ளையார் கோவில் தெருவில், பத்தாம் நெம்பர் வீட்டு மாடியில் குடியிருக்கிறோம். என்னுடைய அண்ணன் பெயர் ரமணி. என்னைவிட இரண்டு வயது மூத்தவன். பதினாறு வயசு ஆகிறது. அவன் களிமண்ணில் அழகான பொம்மைகள் செய்வதில் நிபுணன். அவனை நேற்று மாலை போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள்!"

"இவன் யார்?" என்று அவளுடன் வந்தவனைச் சுட்டிக்காட்டினார் ஜயராஜ்.

"இவன், நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு எதிர்வீட்டில் குடியிருக்கிறான். கைலாசம் என்று பெயர். எங்களுக்குத் தெரிந்தவன். ஏதோ பென்ஸில் பாக்டரியில் வேலை செய்து தானாகப் பிழைக்கிறான்."

"ரமணியை என் போலீஸார் பிடித்துச் சென்றார்கள்?" என்று கேட்டார் ஜயராஜ்.

"எங்கள் அப்பா பெரும் பணக்காரர். நாங்கள் இருக்கும் தெருவிற்குப் பக்கத்துத் தெருவிலேயே இருக்கிறார். என்னுடைய அண்ணன் பொம்மைகள் செய்வது அவருக்குப் பிடிக்கவில்லை. அதுவுமல்லாமல், எங்கள் அம்மா இறந்துவிட்ட பிறகு, அப்பா எங்களைச் சரியாகக் கவனிப்பதில்லை. நானும் ரமணியும் தனியாக வந்துவிட்டோம். இரண்டு வருஷங்களாகி விட்டன. ரமணியின் தொழில் எங்கள் வயிற்றைத் தான் கழுவியது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவில்லை. எக்ஸிபிஷனில் ஒரு ஸ்டால் எடுத்துப் பொம்மைக் கடை வைத்தால், நல்ல லாபமும் விளம்பரமும் கிடைக்கும் என்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே ரமணியிடம் சொல்லி, வெட்கத்தை விட்டு அப்பாவிடம் போய் இரண்டாயிரம் ரூபாய் கேட்கும்

படி சொன்னேன். அவனும் தயங்கிக்கொண்டே அப்பாவிடம் உண்மையைச் சொல்லி, இரண்டாயிரம் ரூபாய் கேட்டான். அப்பா கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் இருவருக்கும் பேச்சு முற்றிவிட்டது. அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் வந்து சண்டையை விலக்க வேண்டியதாகிவிட்டது. மறுநாள் மாலை அப்பாவின் மண்டையில் யாரோ கைத்தடியால் அடித்துவிட்டு, அவருடைய இரும்புப் பெட்டியிலிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அப்பாவுக்கு ஆபத்து ஒன்றும் இல்லை. ஆனால் ஐயாயிரம் ரூபாய் போய்விட்டது. தந்தையும் தனயனும் பணவிஷயமாகச் சண்டை போட்டுக்கொண்ட விஷயத்தை வைத்து, போலீஸார் ரமணியைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். ரமணி திருடவில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதை யார் நம்புவார்கள்?'' என்னும் போதே அவளுடைய கண்களில் பொல பொலவென்று கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன.

``திருட்டு நடந்த அறையில், இரும்புப் பெட்டியின்மீதும் கைத்தடியின்மீதும் ரமணியின் கை ரேகைகள் பதிந்திருக்கின்றன. அதனால்தான் போலீஸ்காரர்கள் உடனே ரமணியைப் பிடித்துவிட்டார்கள். ஏதோ ஆத்திரத்தில் ரமணி செய்திருக்கிறான் என்று நான் சொன்னால் இவள் நம்ப மாட்டேன் என்கிறாள்!'' என்றான் கைலாசம்.

``சரி, நீங்கள் போகலாம், நான் இந்தக் கேஸ் விஷயமாக யோசனை செய்து பார்க்கிறேன்'' என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு டெலிபோனை எடுத்தார். டயலைத் திருப்பினார். இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் குரல் கேட்டதும், ``ஜயராஜ் பேசுகிறேன். ரமணியின் கேஸ் விஷயமாக ஒரு சந்தேகம். பணம் கிடைத்துவிட்டதா?'' என்று கேட்டார்.

``நீங்கள் இந்தக் கேஸில் தலையிடவேண்டாம், ஸார்! சாட்சிகள் பலமாக இருக்கின்றன! வீணாக ஏன் சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள்? ஆனாலும் நீங்கள் கேட்டதற்காகப் பதில் சொல்கிறேன். பணம் கிடைக்கவில்லை!'' என்றார் சந்தானம்.

``தாங்க்ஸ்''..ரிஸீவரை லொட்டென்று வைத்தார் ஜயராஜ்.

சுமார் ஒரு மணி நேரம் கழித்து, நாட்டுப் பிள்ளையார் கோவில் தெருவில், பத்தாம் நம்பர் வீட்டில், மாடிமேல் ஏறி, கதவைத் தட்டினார் ஜயராஜ்.

சுமதி ஓடிவந்து கதவைத் திறந்தாள். ஜயராஜ் சிரித்துக்கொண்டே, ``இந்த இடத்தைப் பார்க்கவேண்டும்!'' என்றார்.

"என்ன ஸார், இது? உங்களுக்கும் என்மீது சந்தேகம் வந்து விட்டதா? நீங்கள் வீடு பூராவும் தேடிப் பார்த்தாலும் காணாமல் போன பணம் கிடைக்காது! போலீஸ்காரர்கள் வந்து தேடியது போதாது என்று நீங்களும் வந்து விட்டீர்கள். போலீஸ்காரன் ஒருவன் இன்று முழுவதும் என்னைத் தொடர்ந்து வந்தான். அப்புறம் அவனுக்கே சலிப்பாகிப் போய்விட்டான்!" என்றாள் சுமதி.

ஜயராஜ் தமக்குள், 'இந்தப் பெண் ரொம்பவும் கெட்டிக்காரி, பொல்லாதவள், வாயாடி!' என்று நினைத்துக்கொண்டார்.

பிறகு சிரித்துக்கொண்டே, "நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள். நான் இந்த இடத்தைப் பார்த்தே ஆகவேண்டும்" என்று உள்ளே சென்று எல்லா இடங்களையும் பார்த்தார். ஓர் அறையில், அழகான களிமண் பொம்மைகள் வர்ணம் பூசப்பட்டு, பெரிய பீரோவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு மூலையில் களிமண் கட்டிகள் விழுந்து கிடந்தன. இவைகளையெல்லாம் பார்த்துவிட்டு, ஜயராஜ் வெளியே போய்விட்டார்.

நள்ளிரவு. பன்னிரண்டு மணி.

ஏதோ சப்தம் கேட்டு, சட்டென்று விழித்துக்கொண்ட கைலாசம் எழுந்துபோய் விளக்கைப் போட்டான். பால்கனியிலிருந்து ஓடிவந்த ஓர் உருவம் அவனைப் பிடித்து, வாயைப் புடைத்து, நாற்காலியில் கட்டி விட்டு, பக்கத்து அறைக்குள் நுழைந்தது. முகமூடி அணிந்த அந்த உருவம் சமையலறையில் எதையோ உருட்டியது. பதினைந்து நிமிஷத்தில் மறைந்துவிட்டது.

தெருக் கோடியில் இருந்த ஒரு டெலிபோன் பூத்திற்குள் அந்த முகமூடி உருவம் நுழைந்து டெலிபோனை எடுத்து, ரிஸீவரின் மேல் கைக்குட்டையைப் போட்டு மூடிவிட்டுக் கரகரத்த குரலில் பேசியது. "யாரது, இன்ஸ்பெக்டர் சந்தானமா? நாட்டுப் பிள்ளையார் கோவில் தெருவில், முப்பதாம் நம்பர் வீட்டில் ஏதோ கலாட்டா. உடனே போய்ப் பாருங்கள்!"

"நீங்கள் யார்?"

"மஹாபாரதத்தில் வரும் ஐந்து பேர்களில் ஒருவன்: பீமன்!"

மறுநாள் காலை, போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரே ஜயராஜின் கார் நின்றது. காரிலிருந்து இறங்கிய ஜயராஜ், இன்ஸ்பெக்டர் சந்தானத்தின் அறைக்குள் நுழைந்தார்.

"ஹலோ, மிஸ்டர் ஜயராஜ்!

உங்களைத்தான் நினைத்துக் கொண்டேன். நேற்று இரவு ஒரு நம்பமுடியாத சம்பவம் நடந்தது!"

"என்ன?"

"நாட்டுப் பிள்ளையார் கோவில் தெருவில், முப்பதாம் நம்பர் வீட்டில் ஏதோ கலாட்டா என்று டெலிபோன் வந்தது. டெலிபோன் செய்தவன், மஹாபாரதத்தில் வரும் பீமன் என்றான். ஆனாலும் அங்கே போய்ப் பார்த்த போது, கைலாசம் என்னும் பையன் கட்டிப் போடப்பட்டிருந்தான். அவன் அறையில் சாமான்கள் உருண்டு கிடந்தன. பரிசோதித்துப் பார்த்ததில், பல இடங்களில் ரமணியின் கைரேகைகள் பதிந்திருந்தன! ரமணி இங்கேயே லாக்கப்பில் இருக்கிறான்! இந்தக் கேஸை என்ன செய்வது?"

"ரமணியின் கைரேகைகள் இருக்கும்போது, இதை விட வேறு சாட்சி என்ன வேண்டும்? ரமணியை மீண்டும் கைது செய்யுங்கள்!"

சந்தானத்தின் முகம் சுருங்கி விட்டது. 'இருபதாம் நூற்றாண்டில், கலியுகத் திருடர்கள் வாழும் இந்த உலகத்தில் மூளை இல்லாதவர்களுக்கு இடமே கிடையாது!' என்று எண்ணினார் அவர்.

"இதோ பாருங்கள், மிஸ்டர் சந்தானம்! கண்ணால் பார்ப்பதையும், காதால் கேட்பதையும்கூட நாம் சில சமயங்களில் நம்பக் கூடாது! ஒரு கை நிறையக் களிமண்ணைப் பிசைந்து எடுத்து, மறுபடியும் கீழே போட்டு விடுங்கள். அந்தக் களிமண்ணில் உங்கள் கைவிரல்களின் ரேகைகள் அப்படியே பதிந்துவிடும். அந்தக் களிமண் கட்டி உலர்ந்ததும், கெட்டியாகி விடுகிறது. அதை எடுத்து, கடைகளில் விற்கும் ஒருவித மிருகக் கொழுப்பை வாங்கி வந்து, கொழுப்பை உருக்கி அந்தக் களிமண் கட்டியின்மீது ஊற்றி விட்டால், சிறிது நேரம் கழித்து அது கண்ணாடி மாதிரி உலர்ந்து விடுகிறது. அதை எடுத்துப் பார்த்தால், களிமண்ணில் அச்சாகியிருந்த கைரேகைகள் இந்தக் கொழுப்பின்மீதும் பதிந்துவிட்டிருக்கும். ரப்பர் போன்ற அந்த மெல்லிய கொழுப்பை எப்படி வேண்டுமென்றாலும் வளைக்கலாம். அதை எங்கேயாவது ஒற்றினால், அந்தக் கைரேகைகள் அப்படியே பதிந்துவிடும்! இந்த யுக்தியைத் தான் அந்தத் திருடன் கையாண்டு இருக்கிறான். விஞ்ஞானம் வளர்கிற இந்தக் காலம் போகப்போக வேடிக்கையாக இருக்கும்!"

"அப்படியானால் உண்மையான திருடன் யார்?"

"கைலாசம்தான்! அவன்தான் ரமணியின் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்துகொண்டிருந்தான். தக்க சமயத்தில், ரமணியின் அப்பாவைப் பின்னாலிருந்து மண்டையில் அடித்துவிட்டுப் பணத்தை அபேஸ் செய்துவிட்டான். இந்தக் கேஸ் விஷயமாக ஒன்றும் செய்வதற்கில்லை என்று அவன் வீட்டு அடுப்பங்கரையில், புதிதாக அடுப்புப் போடப்பட்டிருக்கிறது. ஆகையால் அடுப்பைத் தோண்டிப் பாருங்கள். பணம் கிடைக்கும்!"

"மிஸ்டர் ஜயராஜ்! அப்படியானால் நேற்று இரவு போன் செய்த பீமன்..."

"நான்தானா என்று கேட்கிறீர்களா? நானேதான்! அதை மறந்துவிடுங்கள்!"

சீனக் கதை:

மதிப்புள்ள பொருள்

தம்பி

ஒரு ஜமீன்தாருக்கு ஒரு குமாஸ்தா தேவையாயிருந்தது. அந்த ஜமீன்தாருக்குச் சொந்தமான பல கிராமங்களிலிருந்தும் வரி வசூல் செய்வதே குமாஸ்தாவின் வேலை.

எத்தனையோ பேர் அந்த வேலைக்கு மனுப் போட்டார்கள். கடைசியில் ஓர் இளைஞனை அவ்வேலைக்குப் பொறுக்கினார் ஜமீன்தார்.

அறுவடை மாதத்தில் ஜமீன்தார் தம் புதிய குமாஸ்தாவைப் பார்த்து, "தம்பீ, இது தான் வரி வசூல் செய்யும் சமயம். நீ ஒவ்வொரு கிராமத்திலும் எனக்குச் சேர வேண்டிய வரிப் பணத்தை வசூல் செய்துவிடு. பிறகு அந்தப் பணத்தைக் கொண்டு போய், பட்டணத்திலிருந்து எனக்கு உயர்ந்த பொருள்கள் ஏதாவது வாங்கி வா. இந்த இரண்டு விஷயத்திலும் உன் சாமர்த்தியத்தைப் பார்க்கலாம்" என்றார்.

வாலிபக் குமாஸ்தா கிராமங்களுக்குப் போனான். அது அறுவடை மாதம் என்று பேரே தவிர, எங்குமே அறுவடை நடக்கவில்லை.

குடியானவர்கள், பாவம், பணம் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தனர். மூன்று வருஷமாக நல்ல மழையே இல்லை. நிலம் நன்றாக விளையவில்லை. அவர்கள் சாப்பாட்டுக்கே இல்லாமல் தவித்தார்கள். அப்படியிருக்கும்போது வரிப்பணத்துக்கு எங்கே போவது?

இந்தக் கஷ்டங்களை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். "நீ புதிய குமாஸ்தா போலிருக்கிறது. இதற்கு முன் வந்த குமாஸ்தா இரக்கமில்லாமல் எங்களை மிரட்டி அடித்துப் பணம் கேட்பான். எங்கள் வீட்டிலிருந்த நகை, ஆடு, மாடு எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு போய்விடுவான். நல்ல ஜமீன்தார்! அவன் மனிதனா,

மிருகமா? இப்படி எங்களை வாட்டி வதைத்து வரி வாங்கித்தானு அவன் வாழவேண்டும்?" என்றெல்லாம் ஆத்திரமாகப் பேசினார்கள்.

புதுக் குமாஸ்தா யோசித்தான். தனக்குமுன் இருந்த குமாஸ்தா கொடியவனுயிருந்ததால் ஜமீன்தாருக்குக் கெட்ட பெயர் வந்துவிட்டது என்பதை உணர்ந்தான்.

உடனே அவன், "உழவர்களே, கேளுங்கள், நீங்கள் நினைப்பது போல் ஜமீன்தார் கொடிய மனம் படைத்தவரல்ல. அவர் கருணை மிகுந்தவர். இந்த வருஷம் நீங்கள் யாரும் வரி செலுத்தவேண்டாம். கடவுள் கருணையால் அடுத்த ஆண்டு நல்ல மழை பெய்து நிலம் விளைந்தால் நீங்கள் வரி செலுத்துங்கள். ஜமீன்தார் இதைச் சொல்லத்தான் என்னை அனுப்பினர்" என்று உரக்கப் பேசினான்.

அவனைச் சூழ நின்ற உழவர்கள் துள்ளிக் குதித்தனர். "ஜமீன்தார் வாழ்க!" என்றனர்.

இப்படி எல்லாக் கிராமங்களிலும் வரி வஜா செய்துவிட்டு இரண்டுநாட்களில் குமாஸ்தா ஜமீன்தாரிடம் வந்து சேர்ந்தான்.

"என்ன தம்பீ! வரி விஷயம் எல்லாம் முடிந்து விட்டதா?" என்று கேட்டார்.

"எல்லாம் முடிந்து விட்டது" என்று அடக்கமாகக் கூறினன் குமாஸ்தா.

"சரி, எனக்கு என்ன பரிசு வாங்கிக்கொண்டு வந்தாய்?"

"ஐயா, அது விலை மதிக்கமுடியாத பொருள்!"



"என்ன, அது என்ன பொருள்? எங்கே, காட்டு!" என்றார் ஜமீன்தார் ஆவலோடு.

"பிரபுவே, தங்கள் வரிப் பணத்தை விலைகொடுத்து மக்களின் அன்பு என்ற பொருளை நான் வாங்கியிருக்கிறேன். நேற்றுவரையில் தங்களைத் தூற்றிக் கொண்டிருந்த மக்கள் இன்று உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று உழவர்களுக்கு இரங்கி, வரிவஜா செய்த கதையை விவரித்தான்.

வரிப்பணம் வசூலாகவில்லை என்று கேட்டதும் ஜமீன்தாருக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது. "பொடிப் பயலே! உன்னை நான் வேலைக்கு வைத்ததே தப்பு" என்று உறுமினார். அந்தக் குமாஸ்தாவைச் சிறையில் அடைத்துவிட்டு, தாமே வசூல் செய்யப் புறப்பட்டார்.

ஜமீன்தார் ஒரு கிராமத்துக்குள் நுழைந்தது தான் தாமதம், அந்தக் கிராமத்திலிருந்த அனைவரும் ஓடிவந்து அவரை வணங்கி வரவேற்றார்கள். "ஏழைக்கு இரங்கும் ஜமீன்தார் வாழ்க!" "வரி வஜாசெய்த வள்ளல் வாழ்க!" என்று பாராட்டினார்கள்.

சில உழவர்கள் அவர் காலில் விழுந்து வணங்கி அடக்கத்துடன், "ஐயா, உங்கள் உயர்ந்த குணம் தெரியாமல், நாங்கள் பெரிய குற்றம் ஒன்று செய்ய இருந்தோம். தாங்கள் ஏழைகளை வாட்டி வரி வாங்குகிறீர்கள் என்ற காரணத்துக்காக இன்று இரவு உங்களைக் கொன்று விடுவதாக இருந்தோம். ஆனால் நேற்று நீங்கள் வரி வஜா செய்துவிட்டதாக உங்கள் புதுக் குமாஸ்தா சொன்னதும் எங்கள் மனம் மாறிவிட்டது. நாங்கள் செய்ய இருந்த குற்றத்தை மன்னித்தருளுங்கள்" என்றார்கள்.

அப்போதுதான் ஜமீன்தாருக்குக் குமாஸ்தா சொன்ன உண்மை புரிந்தது. நேற்றுவரை இந்தக் குடியானவர்களுக்கு எதிரியாகயிருந்த அவரை இன்று அதே குடியானவர்கள் வாழ்த்துகிறார்கள்! இன்று இரவு கொலையுண்டு சாக வேண்டியவர் பிழைத்துவிட்டார்!

நேரே மாளிகைக்குப் போய், புதுக் குமாஸ்தாவை விடுதலை செய்து அவனைத் தழுவிக் கொண்டார். "தம்பி! நீ வாங்கிய து விலை மதிக்கமுடியாத உயர்ந்த பொருள்தான்!" என்று சொல்லி அவன் அறிவைப் பாராட்டினார்.

நள்ளிரவில் நடந்தது

பெ. கலாசாமி

அன்று இரவு என்ன காரணத்தாலோ தெருவிளக்குகள் எரியவில்லை. பிரபல வைத்தியர் திரு நமசிவாயம் அவர்களின் பெரிய வீடு இருளில் மூழ்கிக் கிடந்தது. சுற்றுப் புறத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் எந்த இடத்திலாவது 'மினுக்' கென்று எரியும் சின்னஞ் சிறு சுடர் விளக்கு வெளிச்சம்கூட இல்லை. எங்கும் ஒரே அந்தகாரம்; கன இருள். அன்றுதான் அமாவாசை.

அப்போது நடுநிசி. மணி பன்னிரண்டு அடித்துவிட்டது. வைத்தியர் நமசிவாயத்திற்கு நல்ல தூக்கம். படுக்கையிலே மெதுவாகப் புரண்டு கொடுத்தார். 'கிரீச்'—கட்டிலின் ஓசை மறுகணம் அடங்கிவிட்டது. ஆனால் ...பக்கத்து அறையிலே, அது என்ன சப்தம்..?

பாத்திரங்கள் உருளும் ஒலி! நமசிவாயம் விழித்துக்கொண்டார். தூக்கமும் விழிப்பும் கலந்த அந்த நிலையில் சட்டென்று எதுவும் புரியவில்லை அவருக்கு. 'அடுத்த அறையில் ஏதோ அரவம் கேட்டதே..ஒரு வேளை பூனை கீனை வந்து அட்டகாசம் பண்ணு

கிறதோ?' என்று மெல்ல மெல்ல யோசித்துப் பார்த்தார்—ஒன்றுமே இல்லை! ஒரே அமைதி! அவ்வளவுதான்—வைத்தியர் மறுபடி கண்ணை மூடினார்; தூங்கிப் போனார்.

* * *

ஐந்து நிமிஷங்கள் கழிந்திருக்கும். வைத்தியர் வீட்டு வாசற் கதவை யாரோ 'படபட' வென்று தட்டினார்கள். நமசி வாயத்திற்கு மறுபடியும் விழிப்பு ஏற்பட்டது. அர்த்த ராத்திரி நேரத்தில் அந்த அகால வேளையில் யார் வந்திருப்பார்கள் என்று அவர் யோசித்துக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் எந்த நேரமும் அவசர சிகிச்சைக்கு அவரிடம் நோயாளிகள் வருவது சகஜம். ஆகவே, விளக்கைப் போட்டுவிட்டுப் போய் வெளி வாசற் கதவைத் திறந்தார். அவர் எண்ணியபடியே சிகிச்சைக்காகத்தான் ஒரு மனிதன் வந்திருந்தான்—தனி ஆளாக. 'இரவு பகல் எந்த நேரத்திலும் அவசர சிகிச்சை செய்யப்படும்' என்று எழுதியிருந்த பலகைமீது பாட்டரி லைட் அடித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன். வைத்தியர் அவனை உள்ளே அழைத்து வந்தார்.

வலது கால் பெரு விரலில் சற்று முன் ஒரு கருந்தேள் கொட்டி விட்டதாம். இன்னும் சரியாக நெறி ஏறவில்லை. என்றாலும் அவன் தாங்கவொண்ணாத வேதனையால் துடிக்கிறான் என்பது முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. தவிர, அவன் சற்றே பீதியும் பயமும் கொண்டிருந்தான் என்றும் நினைக்கும்படி இருந்தது அவன் தோற்றம். உடம்பெல்லாம் வேர்வையும் லேசான நடுக்கமும் இருந்தது. இந்த வேளையில் வந்து தொந்தரவு கொடுப்பதால் வைத்தியர் ஒரு சமயம் கோபிப்பார் என்று பயந்தானோ, என்னவோ!

ஆனால் வைத்தியர் அப்படியெல்லாம் நினைப்பவரல்ல. 'மட மட' வென்று காரியத்தில் முனைந்

தார். அரைகோடியில் 'தேள்கடி' மருந்து தயார் செய்து, கொட்டு வாயில் நாலைந்து சொட்டுகள் விட்டார். பிறகு வேறு ஒரு மருந்தை அதே இடத்தில் வைத்துக் கட்டினார். அவ்வளவுதான்; வலியும் கடுகடுப்பும் மறைந்த மாயம் தெரியவில்லை!

வைத்தியர் கேட்ட கட்டணத்தைச் செலுத்திவிட்டு, திருப்தியுடன் வெளியேறி நடந்தான் அந்த ஆசாமி. வெளியே சரியான கும்மிருட்டு. மேடு பள்ளம் தெரியாத மையிருள்.

* * *

கைகளைக் கழுவிச் சுத்தம் செய்தபின், வைத்தியர் நமசிவாயம் வெளிவாசற் கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே போனார். படுக்கைக்குப் போகு முன் கொஞ்சம் தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. ஆகவே அடுத்த அறைக்குள் நுழைந்து விளக்கைப் போட்டார். என்ன ஆச்சரியம்! ஓரமாயிருந்த அலமாரி திறந்து கிடந்தது! மேல் தட்டில், குழம்பிக் கிடந்த வெள்ளிச் சாமான்களுக்கிடையே எதையோ பரபரப்புடன் தேடினார் வைத்தியர். பகீரென்றது அவருக்கு! அறுநூறு ரூபாய்க்கு மேல் நோட்டுகளாக வைத்திருந்த அந்த டப்பாவைக் காணவில்லை! நமசிவாயம் சில கணங்கள் ஸ்தம்பித்து நின்றுவிட்டார். அப்போது....

தற்செயலாகக் கீழே பார்த்த அவருடைய கண்கள், லேசாக நசுக்குண்டு குற்றுயிராய்த் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு பெரிய கருந்தேளைக் கண்டு கொண்டன. மீண்டும் ஒரு முறை தூக்கிவாரிப் போட்டது! ஏதோ நினைவு வந்தவராய்த் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். புழக்கடை வழியாக அந்த அறைக்குள் வரும் கதவு திறந்திருந்தது. ஓடோடியும் சென்று புழக்கடைக் கதவையும் சரி பார்த்தார் வைத்தியர். திருடன் வந்து போனதற்கு அறிகுறியாக அதுவும் தாழ்ப்பாளிடாமல் திறந்தே கிடந்தது!

விஷயம் விளங்க வெகு நேரமாகவில்லை வைத்தியருக்கு. திருடன் அவர் வீட்டிலேயே வந்து களவு செய்தது மல்லாமல், அது சமயம் ஏற்பட்ட தேள்கடிக்கு அவரிடமே சிகிச்சையும் பெற்றுக்கொண்டு சுகமாய்க் கம்பி நீட்டி விட்டான்! என்ன நெஞ்சழுத்தம் அவனுக்கு!

தலைவாசற் கதவை மறுபடியும் திறந்து வெளியே நோக்கினார் வைத்தியர் நமசிவாயம். கயவர்களுக்குத் துணைபுரியும் அக்காரிருளில் அந்தப் பக்காத் திருடன் சென்று மறைந்த திசையே தெரியவில்லை அவருக்கு.

அவரை அறியாமல் ஒரு நீண்ட பெருமூச்சு வந்தது. பேசாமல் திரும்பி உள்ளே வந்துவிட்டார். மேஜைமீது விரிந்து கிடந்த அன்றைத் தினப்பத்திரிகையில் 'இன்றைய ராசி பலன்' பகுதியைத் தற்செயலாக நாடின அவர் கண்கள். அவருடைய ராசியாகிய 'விருச்சிக'த்திற்கு நேராக அன்று பலன்—'பண நஷ்டம்' என்று போட்டிருந்தது!

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

E. 157. தண்டபாணி R. வேலூர். 158. துரைசாமி S. சென்னை 17. 159 தசரதன், கும்பகோணம். 160. துரைசாமி R. விராலிமலை. 161. தேவ சேனாதிபதி, சென்னை 14. 162. தர்மராஜு V. நாகலப்பட்டி. 163. துவாரகாநாதன் K. P., கிணத்துகடவு. 164. நவரத்தினகோமஸ், குருநாகல், இலங்கை. 165. துரைலிங்கம் R. ஜயலட்சுமி S. திரிபுரம் S. சென்னை. 2. 166. திவான் முத்து முகம்மது M. S., சிவகங்கை. 167. தண்டபாணி V. பங்கஜவல்லி, கோயம்புத்தூர். 168. தேசிகாச்சாரி K.N., சேலம்.

E. 48. ஏகாம்பரம், K. K., சென்னை-14. 49. ஏகாம்பரம், G., சென்னை-5. 50. ஈஸ்வரி, K. S., காசிபாளையம். 51. எதிராஜுலு, G., மேட்டுபாளையம். 52. எல்லையம்மன், M, மதுரை. 53. ஏகாம்பரம், S. M., வாளாடி. 54. ஈஸ்வரன், T. L., கோயமுத்தூர். 55. எதிராஜுலு, V. K., திருப்பத்தூர். 56. இருளவேல், M., சமுத்திரம். 57. இசக்கி, A., விக்ரமசிங்கபுரம். 58. ஏகாம்பரம், P. L., புதுவயல். 59. இளங்கரம், S., யாழ்ப்பாணம். 60. இஸ்மயா, K. M. M., சிங்கப்பூர். 61. எட்வர்டு சுந்தர்ராஜ், தாராபுரம். 62. ஏகப்பன், P. L., புதுவயல். 63. இளமாறன், M., மதுரை. 64. ஏகாம்பரம், S., சென்னை-10. 65. ஈஸ்வர் V. A., மதுரை. 66. இதயதுல்லா T., ஆடுதுறை. 67. எழுமலை, M. S., சோளிங்கபுரம். 68. இளமதி, K., மதுரை.

F. 15. பர்னான்டோ, R., கொழும்பு 1. 16. பாரூக், M. S. M., கொழும்பு 1. 17. பாரூக், I., யாழ்ப்பாணம். 18. பிரான்ஸிஸ் எக்ஸாவியர், S., திருச்சி. 19. பக்கீர் முகஹமது, P. S., கோயமுத்தூர். 20. பாரூக், M. P. A., திருநெல்வேலி. 21. பாகீர், P. S., கோயமுத்தூர். 22. பாரூக் M. E. M., குன்னபன்னு. 23. பாரூக், P. S., அதிராம்பட்டினம். 24. பாரீட், S., இலங்கை.

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

ஜூலை, 1-'54 கூபன் நெ:

G. 224. கோபாலன் C., பதுளை. 225. குருநாதன், V. K., சென்னை. 226. கணேசன் A., மதுரை. 227. கங்காரெட்டி E., சலாவெடு. 228. கோவிந்தராஜுலு, M. K., சௌகார்பேட்டை. 229. குருராஜன், J., ராஜேஸ்வரி, T., இலங்கை. 230. கணபதி சுப்பிரமணியன், தாராபுரம். 231. கஜேந்திரன், D., செங்கல்பட்டு. 232. கோபால கிருஷ்ணன், R. V., திண்டிவனம். 233. கணேசன், S., பதுளை. 234. கணபதி. T. S., திருத்தருப்பூண்டி. 235. கீதா K. V., ராமசாமி, V. S., ராகவன், S., கிருஷ்ணசாமி S., புதுப்பாளையம், கடலூர். N. T. 236. கோவிந்தராஜுலு, M., சென்னை-20. 237. கோபாலசாமி, M. K., சாத்தூர்.

★★★★★★★★★★★★★★★★

கண்ணன்
கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★★

238. கணபதிசுப்பிரமணியம், H., கரூர். 239. கங்காதரன், R., சென்னை-4. 240. ஞானசம்பந்தம், M. V., குருநாதன், M. K., குடியாத்தம். 241. கோபாலன், R., சென்னை-20. 242. கோபால கிருஷ்ணன், T. S., வேலூர் N. A. 243. ஞானசேகரன், D., சென்னை-4. 244. கணபதி, S., பண்ருட்டி. 245. கங்கா, R., திருவாரூர். 246. கோபாலசாமி, R., சென்னை-5. 247. குருசாமி, M., சங்கரன், சங்கரன்கோயில், 248. கோபாலகிருஷ்ணன், S., சென்னை. 249. கணேசன், P., சென்னை-5. 250. கோபாலன், R., ராமநாதபுரம். 251. குணரத்தினம், M., இலங்கை. 252. கணபதி, K., புதூர். 253. ஞானசுந்தரம், V., வடிவேலு, D., பசுமலை. 254. கௌரி P. K., பத்மா; போரூர். 255. குரு R., எழும்பூர், சென்னை. 256. கிரிஜா S., சட்டநாதபுரம். 257, கீதா. குணராஜன் R., சென்னை 4. 258. கோபாலகிருஷ்ணன் R., சுப்பிரமணியன் R V., மதுரை. 259. கணேசன் R., பேராவூரணி. 260. கணேசன் R., பத்மாவதி., தென்னூர், திருச்சி. 261. கணேசன் M., குளித்தலை. 262. கணபதி T. G., அங்கப்பன்., பரமசிவம்., திருச்செங்கோடு. 263. கங்காதரன் K. N., பாலசுப்பிரமணியன் K. N., காஞ்சிபுரம். 264. குருசாமி K., சங்கரன்கோயில். 265. குருபிரஸாத் P., சென்னை 5. 266. கோபாலன் V., சந்துரு V., சென்னை 5. 267. கோபாலகிருஷ்ணன் H. R., அனந்தநல்லூர்.

(மீதி அடுத்த இதழில்)

என்ன உலகம்?

ஜோதிர்லதா கிரிஜா

சங்கரன் விஞ்ஞான உபாத்தியாயரை வியப்புடன் எறிட்டு நோக்கினான். விஞ்ஞான ஆசிரியர் வீரப்பன் 'மடக் மடக்' கென்று கையில் இருந்த ஒரு கோப்பைக் காபியையும் விழுங்கினார். விழுங்கிவிட்டு இடப்பிலிருந்து வட்ட வடிவமான ஒரு சிறு டப்பியை எடுத்தார். எடுத்துத் திறந்து, அதிலிருந்து ஒரு சிட்டிகை மூக்குப் பொடியை எடுத்துச் 'சர்..ர் சர்..ர்' என்று ஓர் இழுப்பு இழுத்தார்.

"டேய், சங்கரன்! இங்கே கொஞ்சம் வந்து விட்டுப் போ!"

சங்கரன் 'விருட்' டென்று எழுந்து வாத்தியாருக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

"ஒரே ஓட்டமாய் ஓடிப்போய் நம்முடைய நாட்டான் கடையில் ஒரு சிகரெட் பெட்டி வாங்கிக் கொண்டு வா! உம்; ஓடு!"

சங்கரன் திடுக்கிட்டு நின்றான். இத்தகைய தர்மசங்கடமான கட்டளையைத் தன் ஆசிரியர் இடுவாரென்று அவன் எதிர் பார்க்கவில்லை.

வீரப்பன் சங்கரனின் திகைப்பைச் சிறிதும் கவனித்ததாய்த் தெரியவில்லை. தம் சட்டைப் பையிலிருந்து அவர் எடுத்துக் கொடுத்த நாணயத்தை இயந்திரம் போல் கை நீட்டிப் பெற்றுக் கொண்ட சங்கரன், தயங்கித் தயங்கி நாட்டான் கடையை நோக்கிக் கிளம்பினான்.

சங்கரனுக்குச் சிகரெட் கேட்கச் சங்கோஜமாயிருந்தது. இருந்தாலும் என்ன பண்ணுவது? கேட்டு வைத்தான்.

நாட்டான் ஒரு மாதிரி சிரித்துக்கொண்டார். "தம்பி! நீ கூடப் புகை பிடிக்க ஆரம்பித்து விட்டாயா? வேண்டாம் தம்பி! பழகிவிட்டால், விடுவது கஷ்டம்."

சங்கரனின் முகம் அவமானத்தால் சிவந்து விட்டது. "எனக்கு இல்லை, ஐயா! எங்கள் வாத்தியாருக்கு!"

"என்னமோ தம்பி! நான் நல்லதுதான் சொல்லுகிறேன். அப்புறம் உன் பாடு!"

"இல்லை, ஐயா! நிஜமாகவே வாத்தியாருக்குத்தான்!"

கடைக்காரர் நல்லவர். வெறும் வியாபார நோக்கோடு அவர் அவனைப் பார்த்திருந்தால் 'இன்னும் இரண்டு பெட்டி வாங்கிப் போயேன், தம்பி!' என்று சொல்லியிருப்பார்.

நாலு பேர் பார்க்கும்படியாகச் சிகரெட் பெட்டியைச் சுமந்து செல்ல சங்கரனுக்கு என்னவோ போல் இருந்தது. அதனால், தன் கால் சட்டைப்பையில் மறைவாக வைத்துக் கொண்டான்.

வீரப்பனை எண்ணும்போது அவனுக்கு ஒரே வெறுப்பாக வந்தது. காபியில் 'காபைன்' என்னும் விஷம் இருக்கிறது; புகையிலையில் 'நிக்கோடின்' என்ற நஞ்சு இருக்கிறது' என்று கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் 'சயன்ஸ்' பாடம் நடத்தினார். நடத்தி முடித்ததும் ஒரு குவளை காபி! இரண்டு சிட்டிகை மூக்குப் பொடி! ஒரு பெட்டி சிகரெட்!

சிந்தனை செய்துகொண்டே சங்கரன் வேகமாக நடந்தான். எதிரில் டாக்டர் ரங்கநாதம் சைக்கிளில் வந்தார். அவனைப் பார்த்துப் புன்னகை செய்து விட்டுச் சென்றார்.

தொந்தியும் தொப்பையுமாக இருக்கும் அந்த இளம் டாக்டரின் உருவத்தை மனக்கண் முன்பு நிறுத்திப் பார்ப்பதற்கே அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. இவ்வளவுக்கும் அந்த டாக்டருக்கு முப்பத்தைந்து வயதுக்குமேல் இருக்கவே இருக்காது.

அதற்குள் இத்தகைய வயோதிகத் தோற்றமா? இரண்டு பறங்கிக் காய்களைச் சேர்த்து வயிற்றில் கட்டி விட்டிருப்பது போன்ற பீப்பாய்த் தொப்பை. கன்னத்தின் இருபக்கங்களிலும், தாடைகளிலும் மாட்டுக்குக் கழுத்துக்குக் கீழ் தொங்குவது போல் சதைகள். தம்பைப் பூவாய் நரைத்துவிட்ட தலை. 'இந்தப் பெரிய உடம்பை எப்படித்தான் அந்தச் சின்ன சைக்கிள் தாங்குகிறதோ?'

சங்கரனுக்குத் தன்னையறியாமல் சிரிப்புத்தான் வந்தது. பிறருடைய நோய்களைத் தீர்க்க உத

வும் பெரிய படிப்புப் படித்துப் பட்டம் பெற்ற இந்த டாக்டருக்கு ஏன் தம்முடைய உடம்பை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளத் தெரியவில்லை? தங்கள் உடம்பைச் சரியாக வைத்துக் கொள்ளாதவர்களுக்குப் பிறருடைய உடம்பைச் சரி பார்க்க என்ன உரிமை இருக்கிறது?

பள்ளிக்கூடத்தை அவன் அநேகமாக நெருங்கி விட்டான். நடப்பதற்கு இன்னும் கொஞ்ச தூரம் தான் இருந்தது. இந்தச் சமயத்தில் யாரோ தன் பேர் சொல்லிக் கூப்பிடும் சத்தம் கேட்டது. சங்கரன் திரும்பிப் பார்த்தான். அவனுடைய பெரிய அண்ணா தாமோதரன் வேகமாக அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவருடைய நடையில் இருந்த வேகத்தைக் கவனித்த சங்கரனுக்குச் 'சொரேர்' என்றது. ஒரு நாளுமில்லாத திருநாளாக ஏன் அண்ணா பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டும்?'

சங்கரன் நின்றான். அவனை அணுகிய தாமோதரன், "ஏண்டா ராஸ்கல்! நாட்டான் கடையில் சிகரெட் வாங்கினாயாமே? எத்தனை நாளாக இந்தப் பழக்கம்?" என்று அவன் கன்னத்தை கிமிட்டினார். சங்கரன் பதில் சொல்லுவதற்கு முன்னால், நாலு பக்கங்களிலும் தன் பார்வையைச் சுழலவிட்டான். நல்ல வேளையாக யாரும் கவனிக்கவில்லை.

"எனக்கு இல்லை, அண்ணா! எங்கள் வாத்தியாருக்கு! நீங்கள் வேண்டுமானால் வந்து கேளுங்கள்!" என்று பதில் சொல்லிவிட்டு, சிகரெட் பெட்டியை அண்ணாவுக்கு எடுத்துக் காட்டினான். தாமோதரன் சிரித்தார். "ஏண்டா தடியா! பண்ணுவதையும் பண்ணி விட்டு வாத்தியார் தலையிலா கட்டப் பார்க்கிறாய்? வா, கேட்கிறேன். எந்த வாத்தியார்?"

சங்கரன், அண்ணாவைக் கூட்டிக்கொண்டு கிளம்பினான்.

அவன் சிகரெட் பெட்டியை வீரப்பனிடம் கொடுத்ததைத் தாமோதரன் பார்த்தார். பார்த்ததோடு அவர் திருப்தியடைந்து விடவில்லை. "சார்! நீங்களேவா இவனை சிகரெட் வாங்கி வரச் சொன்னீர்கள்? இது நன்றாயிருக்கிறதா?"

என்று அவரை நேரடியாகவே கேட்டும் விட்டார்.

"தப்புத்தான்; மிகவும் வருந்துகிறேன்!" என்றார் வீரப்பன்.

அன்று மாலையில் சிற்றுண்டி யருந்திவிட்டு நேரே கிருஷ்ணனின் வீட்டுக்கு விளையாடுவதற்காகக் கிளம்பினான், சங்கரன்.

அவன் சென்ற சமயம், கிருஷ்ணனுடைய அம்மா கத்திக்கொண்டிருந்தாள்:

"என்ன வீடு இது! உன் அண்ணாவுக்குத் தனிக்கூட வியவஸ்தையே இல்லையா? பெண்கள் இருக்கிற வீட்டில் இப்படியா சிகரெட் புகையைக் கக்குவது! எதிர் வீட்டுப் பாட்டி பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வாள்? இவனுக்கு ஏற்ற மாதிரி சிநேகிதப் பட்டாளம் ஒன்று வேறு வந்து வாய்த்திருக்கிறதே!"

"ஐயோ, அம்மா! பலக்கப் பேசாமல் இரேன், தயவு பண்ணி! மாடியில் சீட்டாடிக் கொண்டிருக்கிறவர்கள் காதில் விழுந்து வைக்கப் போகிறது!" என்றான் கிருஷ்ணன்.

பிறகு இருவரும் மாடிக்குப் போனார்கள். மாடியில் உட்கார்ந்து அரட்டையடித்தபடி சீட்டு விளையாடிக்கொண்டிருந்தவர்களில் தன் அண்ணா தாமோதரனையும் கண்டபோது சங்கரனால் வியப்படையாமல் இருக்க முடியவில்லை. அதுவும், தாமோதரனின் கையில் சாக்கட்டி போல் காட்சியளித்த சிகரெட்டையும், அவன் திருவாயிலிருந்து கிளம்பிவந்துகொண்டிருந்த புகையையும் கண்டபோது அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

"ஜாக்கியை எடுத்துப் போடுடா!" என்றபடி திரும்பிய தாமோதரன் திடுக்கிட்டுப் போனான். 'உபதேசம் எல்லாம் எனக்கு மட்டும்தான் போலிருக்கிறது!' என்ற அண்ணாவை ஒரு பார்வை பார்த்தான் சங்கரன். அவர் முகத்தில் அசடு அருவியாய்க் கொட்டியது.

"பீடி குடிக்கிற அண்ணாவுக்கு என்னை, 'அப்படிப் பண்ணாதே!' என்று சொல்ல என்ன உரிமை இருக்கிறது? சொல்லுக்கும் செயலுக்கும் துளியும் தொடர்பற்ற மனிதர்களே நிறைந்த இந்த உலகம், என்ன உலகம்?"

சங்கரன் வீட்டுக்கு வந்தவுடன் அவனுடைய தாயார், "ஏண்டா சங்கரா! நீயாவது உன் தங்கைக்குக் கொஞ்சம் கணக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாதா? பத்துக்கு மூன்று மார்க்கு வாங்கியிருக்கிறாள், பார்!" என்று குறைப்பட்டுக் கொண்டாள். சங்கரன் துள்ளிக் குதித்தான். "ஏண்டி, பட்டு! பத்துக்கு மூணு வாங்கினாய்?" என்றபடி அவள் தலையில் ஓர் அடி வைத்தான். பட்டு அழுதாள். சங்கரனின் தலை மறைந்ததும், "வெட்கமில்லாமல் என்னை மட்டும் அடிக்க வந்து விட்டான். இவன் மட்டும் சரியாய்க் கணக்குப் போடுகிறானோ, கேட்கிறேன்? நானாவது மூணு வாங்கினேன். இவன் அதுகூட இல்லை. நூற்றுக்குப் பதினைந்து வாங்கியிருக்கிறான், அரைப் பரீட்சையில்!" என்று முணுமுணுத்தாள். அவள் முனகியது சங்கரனின் காதில் விழுந்ததோ, என்னவோ! யாருக்குத் தெரியும்?

பாளையக்காரர் ஆவல் நிறைந்த கூட்டத்தினரைப் பார்த்து ஒரு முறை கனைத்துக் கொண்டார். முடிவை அறிவிக்க அவருக்கே சிறிது யோசனையாகத்தான் இருந்தது. அவருடைய தயக்கம் சபையினருடைய ஆவலை மேலும் அதிகப் படுத்திற்று. அமலனுக்கும் விமலனுக்கும் சொல்லப் போகும் முடிவை இன்னும் சிறிது நேரம் கழித்துச் சொன்னால் கூடத் தேவலை என்று இருந்தது. யாருக்கு வெற்றி என்பதைத் தெரிந்து கொள்வது அத்தனை சோதனையாக இருந்தது. அவர்களுடைய மனசு பட பட வென்று அடித்துக்கொண்டதை அநுபவித்துப் பார்த்தால்தான் தெரியும். அப்படி அடித்துக் கொண்டது. போட்டியில் வெல்வது கூட அவர்களுக்கு அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை. இந்துமதி கிடைப்பது கூட இப்போது அற்ப விஷயமாகத் தோன்றியது. ஆனால் இவ்வளவு பெரிய சபையில், ஜயித்தவனுக்கு எதிரே தோற்றவனால் எப்படித் தலை நிமிர்ந்து நிற்க முடியும்? அப்படி நிற்பதைவிட, தலை சுக்கு நூறாகத் தெறித்து விட்டாலும் பாதகமில்லை போலிருந்தது அவர்களுக்கு. புலிக்குட்டியின் கேள்விகளுக்கு அவர்கள் என்ன பதில் எழுதினார்கள் என்பதைக் கூட அந்த நேரத்தில் அவர்கள் மறந்து நின்றார்கள். கேள்வி - விடையை என்ன, அவர்கள் தங்களையே மறந்து விட்டார்கள் என்றே சொல்லலாம்.

அவர்களுடைய ஆவலுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைப்பது போல் பாளையக்காரர் கம்பீரமான குரலில் பேசத் தொடங்கினார்: "சபையோர்களே! இந்தப் போட்டியின் கடைசிக் கேள்விக்கு முதலில் நான் சரியான விடை சொல்லிவிடுகிறேன். முதல் புலிக்குட்டியும் இரண்டாவது புலிக்

குட்டியும் இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களைப் போலவே இரட்டையர்கள் என்பதை அநேகமாக நாம் எல்லாரும் அறிவோம். அவர்கள் இருவரும் என்னுடைய வளர்ப்புப் பிள்ளைகள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். முதல் புலிக்குட்டி போட்டி நடந்த சமயங்களைத் தவிர, மற்றச் சமயங்களில் இரட்டைச் சகோதரர்களின் முன்னிலையிலேயே வரவில்லை. ஆனால் இரண்டாம் புலிக்குட்டி இவர்களை இதற்குமுன் பார்த்திருக்கிறான். மல்யுத்தப் பயிற்சி நடக்கும்போது இவர்கள் இருவருமே அவனைக் குகை வாயிலில் பார்த்திருக்கிறார்கள். பிறகு ஆலமரத்தடியில், ‘சமயம் வந்தால் என்னால் ஆன உதவியை வந்து செய்கிறேன்’ என்று அந்த இரண்டாம் புலிக்குட்டியே வலுவில் இவர்களிடம் அன்று சொல்லியிருக்கிறான். அதற்குப் பிரகு இரண்டாம் தடவையாக அமலன் ஏரிக்கரையில் தனியே உலாவ வந்தபோது பார்த்திருக்கிறான். அப்போது ஏரிக்கரையில் அமைந்த ரகசியக் குகையினுள் அவன் மறைந்து சென்று விட்டான். அதே சமயத்தில் விமலன் புலிக்குட்டியைத் தேடி மலைக் குகைக்குப் போயிருக்கிறார். அங்கே ரகசியப் பாதை வழியாக வந்த இரண்டாம் புலிக்குட்டி அவர் கண்ணில் பட்ட மறுகணமே வேறு வழியில் மறைந்து சென்றுவிட்டான். இதெல்லாம் நடந்தது ஒருவருக்கும் தெரியாது. அமலன் பார்த்தது விமலனுக்

குத் தெரியாது. விமலன் பார்த்தது அமலனுக்குத் தெரியாது. இரண்டு பேருமே மறுநாள் நடக்க இருந்த போட்டியைப் பற்றிக் கேட்கவும் அவன் உதவியை நாடவும் எண்ணினார்கள். இவைதான் நடந்தவை. இதுவேதான் கடைசிக் கேள்விக்கும் விடை. இந்த விடையைச் சரியானபடி ஊகித்து எழுதியிருப்பவரே போட்டியில் வெற்றி பெற்றவர் ஆவார். ஏனெனில்



மற்றக் கேள்விகளுக்கெல்லாம் அநேகமாக இருவருமே சரியான விடையை எழுதியிருக்கிறார்கள். ஒருவர் ஒன்றில் ஒரு சிறு பிழை செய்திருந்தால் மற்றவர் வேறு ஒன்றில் அதே போல் செய்து விடையைச் சமமான ரீதியில் எழுதியிருக்கிறார்கள். ஆகவே கடைசிக் கேள்விதான் நாம் இப்போது பார்க்க வேண்டியது. இந்தக் கேள்விக்கும் சகோதரர்களில் ஒருவர் சரியான விடையை ஊகித்து எழுதியிருக்கிறார். அப்படிச் சரியான விடை எழுதிய அமலனே இதற்கு முந்திய போட்டியிலும் வென்றிருப்பதால் அவரே முறியைப் பெறத் தகுதியுள்ளவர்! உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் அவருக்கு என் வணக்கத்தையும் வாழ்த்தையும் கூறுகிறேன். மனம் தளராத முயற்சியும் ஊக்கமும் நிறைந்த இளவரசர் விமலனையும் நான் மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்!"

பாளையக்காரர் இவ்விதம் கூறி முடித்ததும் தம் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். அவர் சொன்ன முடிவு சபையினருக்குத் தெளிவாகப் புரியவே சிறிது நேரம் பிடித்தது. அதன் பிறகு அண்டமே அதிரப் பிளந்தது போல் பெரிய வெற்றி முழக்கமும் ஆரவாரமும் எழுந்தன. அது ஓயவே ஒரு நாழிகை நேரம் பிடித்தது என்றால், கேட்பானேன்? பாரபட்சமின்றி ஜயித்தவனை மனமுவந்து பாராட்டுகின்ற பண்பு அப்போது மிக நன்றாகப் புலப்பட்டது. விமலன் ஜயித்திருந்தாலும் ஜனங்கள் அவனையும் அதே போலப் பாராட்டிக் கொண்டாடப் பின்வாங்கவா போகிறார்கள்?

அமலனும் விமலனும் அப்படியே கல்லாய்ச் சமைந்து போய் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவனுக்கு வெற்றி

யின் அதிர்ச்சி; மற்றவனுக்குத் தோல்வியின் அதிர்ச்சி! அவர்கள் தம் சுய உணர்வு பெற வெகு நேரம் பிடித்தது. தான் காண்பதும் கேட்பதும் கனவல்ல என்று தெளிந்து அமலன் தலை நிமிர்ந்த போது பாளையக்காரர் தம் கையில் வைத்திருந்த செப்பு முறியை அவன் கையில் ஒப்படைத்தார்.

மீண்டும் கைதட்டல்; "வாழ்க! வாழ்க!" என்ற பெருமுழக்கம்!

அன்று இரவு சகோதரர்கள் இருவரும் இரவை எப்படிக் கழித்தார்கள் என்பதை விவரிப்பது முடியாத காரியமாகையால், மறுநாள் அதிகாலையில் அவர்கள் இருவரும் சிம்மக் கோட்டை நோக்கிச் செல்வதிலிருந்து அவர்களைக் கவனித்தாலே போதுமானது.

*　　*　　*

இருள் இன்னும் பிரியவில்லை. பஞ்சகல்யாணியும் நீலவேணியும் தம் தம் இளவரசர்களுடன் கம்பீரமாய் நின்றன. பாளையக்காரர் முன்கூட்டியே யோசனை செய்து வைத்திருந்தார். இவர்கள் இருவரையும் தனியே அனுப்பி வைப்பதில் அவருக்கு நம்பிக்கையில்லை; விருப்பமும் இல்லை. போகும் வழியிலேயே ஒருவர் மீது ஒருவர் குரோதம் கொண்டு கைகலந்து விடுவார்களோ என்ற பயம் வேறு. எனவே அவர்களைச் சிம்மக் கோட்டையில் கொண்டு போய்ச் சேர்க்க ஒரு சிறு படையையே அனுப்ப ஏற்பாடு செய்திருந்தார்.

அந்தச் சிறு படையும் அணிவகுத்துப் புறப்படத் தயாராக நின்றது. பாளையக்காரர் இருவரையும் தனித் தனியே மார்புறத் தழுவி, பிரியா விடை கொடுத்தனுப்பினர். விமலனை மட்டும் தனியாகத் தட்டிக் கொடுத்து, "இளவரசே! தோல்வியே வெற்றியின் முதல்படி. மேலும் வெற்றியும் தோல்வியும் ஒருவருடைய கையில் உள்ள சொந்தப் பொருள்கள் அல்ல. அது தெய்வத்தின் திருவுள்ளத்தைப் பொறுத்தது. மனம் கலங்கவேண்டாம்" என்று சொல்லியனுப்பினர்.

விமலனுக்குத் தன்மீது ஒருவர் பச்சாத்தாபப்பட்டு இரங்கிப் பேசுவது பிடிக்கவில்லை. அவன் எதுவும் லட்சியமில்லாதவன் போல, "பாளையக்காரரே! உம்முடைய நேர்மையையும் பெருந்தன்மையையும் கண்டு வணங்குகிறேன். உங்களைப் போன்றவர்களால்தான் சோழ நாட்டுக்கே தனிப்பெருமை இருக்கிறது. மற்று முள்ள போட்டிகளில் வெல்லும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நான் சிறிதும் கலங்கவில்லை" என்று சொல்லிவிட்டுக் குதிரையின்மீது பாய்ந்து ஏறினன்.

'டக்டக்..டக்டக்' என்று மெல்ல நடந்த குதிரைகள் இரண்டும் நாலுகால் பாய்ச்சலில் செல்லத் தொடங்கின. கூட வந்த சிறு படையினரும் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

அங்கிருந்து சிம்மக்கோட்டைக்கு மூன்று நாள் பிரயாணம் செய்யவேண்டும். ஆங்காங்கே சிறிது நேரம் தங்கி, களைப்பாறிவிட்டுப் படைகள் சென்றன. இரவு நேரத்தில் இரண்டு காவலர்கள் மட்டும் சகோதரர்களுக்கே தெரியாமல் அவர்களைக் காவல் காத்து வந்தனர். (தொடரும்)

கதை: ஆர்வி

தூங்கும் அழகி

படம்: ஸாமி

எங்கள் பகுதி

* "1-6-54"

ஒன்று-ஆறு-ஐம்பத்து நாளில்
உள்ளம் கவருது கண்ணனிதழ்
இன்றும் அன்றும் என்றும்போல்
இவ்விதழும் பார், ஜொலிக்கிறது!
போட்டியில் ஜயித்த அமலனுக்கு
புதுமையான என் வாழ்த்து
(ஆனால்)
'வெற்றியின் முதற்படி தோல்வி' யென
விமலன் தன்னை ஊக்குகிறேன்!
'யானையின் ஏக்கம்' என்னவென
எளிதி லறியா எஜமானே!
ஏனைய மக்களைப் போல நினை,
இறப்பின் முன்னே நிறுத்தினையோ?
பழகிய உணர்ச்சியும் அற்றுவிட்ட,
பகுத்தறிவாளா! பார்த்தாயா?
அழகிய 'பாஸோ' உள்ளத்தை,
அறிந்தார் அற்புத உபகாரி!
மோழை இளைஞன் 'காவிமுடை'
முட்டாள் தனத்தை உணர்த் திடவே
ஏழைக் கவிஞன் 'யாவி' என்பான்,
இயம்பிய பதிலைக் கேட்டீரா?
'ஆடைக்குவிருந்து' நமக்கெல்லாம்,
அறிவின் விருந்தாம் அறிவீரோ?
ஒரு சொல் அடங்கிய பொருள் கொண்டே!
சிறுகதை யொன்றே எழுதிடலாம்!
என்ன மறதி? தம்பி ஐயா
எழுதிய கதையில் வருபவர்க்கு
மறவேன் மறவேன் எந்நாளும்
மறதி மிக்க புரொபஸரையே!
கோபுவை மிரட்டிய பேய்க்கதை யால்
'குஞ்சு' அவர்கட் கோர் அப் ளாஸ்!
குடுகுடுப் பாண்டியின் தூஷிக்கும்
கொடுங்குணம் மாற்றிய கைத் திறன் ஜோர்!
'தூங்கும் அழகி' இரவெல்லாம் எனைத்
தூங்க விடாமல் தடுக்கின்றாள்
அங்குலிமாலன் தன் கதையில்
அடங்கிய தத்துவம் அரிதரிது!
திங்களுக் கிருமுறை வெளிவந்து
திருப்தி யூட்டும் கண்ணனுள்ளே
எங்கள்பகுதி மிக இனிது
இனிதினு மினிது, 'என் விமர்சனம்'!
—சி. தேவகி, திருநாகேசுவரம்.

ரோஜாக் கண்ணன்

1-6-54 கண்ணனைக் கண்டேன். மீனுபாயின் கடிதத்தைப் படித்தேன். அதில் 'நாம் தினமும் பார்த்து அநுபவிக்கும் சம்பவங்கள் வருகின்றதைப் பற்றி எழுதினால் சிலர் காப்பி அடித்ததாகக்

* பரிசு பெற்ற கடிதம்

கூறுவது தவறு. மேலும் அது எழுதுபவர்கள் மனத்தை பெரிதும் பாதிக்கும்' என்று இருப்பதைப் பல முறை படித்துப் பார்த்தேன். ஆம்! அது உண்மை என்பதை நான் மறுக்கவில்லை. மேலும் நானும் ஒரு சிறு எழுத்தாளன்! ஆனால் ஒருவர் ஒரு கதையைப் பற்றி உண்மையாகக் காப்பியடித்தது அல்லது வேறு கதையின் தழுவல் என்று கூறினால்தான், எழுதுபவர்கள் இன்னும் நாம் நல்ல முறையில் எழுத வேண்டும் என்று எழுதத் தொடங்குவார்கள்.

மேலும் சொந்தமாக எழுதினால் தான் கதை வெளி வந்ததும் அதைப் பிறருக்குக் காட்டி மகிழ முடியும். அம்மகிழ்ச்சிக்கு வேறு எதுவும் ஈடாகாது! ஆனால் பிறருடைய கதையைத் தழுவியோ அல்லது அப்படியே காப்பி அடித்தோ எழுதிப் பிறரிடம் காட்டினால், அவர், "இது எங்கேயோ வெளி வந்த மாதிரி...." என்றவுடன் தலை தானாகக் குனிந்துவிடும்! இது மானக்கேடு அல்லவா? குறுக்கு வழியிலே கல்வியோ, பெயரோ எடுக்க வழி தேடக்கூடாது!

நிற்க, சந்திரகிரிக் கோட்டையையும், தூங்கும் அழகியையும் பற்றி எழுதினால் புகழ்ந்து எழுதவேண்டுமே யன்றி வேறுவிதமாக எழுத யாராலும் முடியாது! மறதிப் புரொபஸர் கதை ரசிக்கும் வகையிலே இருக்கிறது. புளியமரத்துப் பிசாசு கதை ஏ-1.

குடுகுடுப்பாண்டி அலுப்புத் தட்டாமல் செல்கிறது. அங்குலிமாலன் போன்ற கதைகள் இனிமேல் கண்ணனில் அடிக்கடி இடம்பெற வேண்டுமென்பது என் அவா. கேளுங்கள், கேட்டீர்களா இரண்டும் அறிவுக் களஞ்சியங்கள். துணுக்குகளில் 20-ஆம் பக்கத் துணுக்கு சுமார்! 19-ஆம் பக்கத் துணுக்குக்கு ஏற்ற படம் இல்லை!

யானையின் ஏக்கம் மூலம் பிராணிகள் கூடத் தம் தாய்ப் பாஷையை அதிகமாக நேசிக்கின்றன என்று அழகாகச் சித்தரிக்கப்பட்டு, தாய் மொழிப்பற்று எல்லோருக்கும் வேண்டும் என்ற ஓர் அறிவுரை அறிவுறுத்தப்படுகின்றது. 'ஒரு சொல் கேளீர்' அரிய முயற்சி. தந்தி வந்தது பலே ஜோர்!

வாழ்க ரோஜாக் கண்ணன்!

மண. அரங்கசாமி, திருவத்திபுரம்.

வளர்பிறை!

1-6-54 'கண்ணன்' இதழைக் கண்ணுற்றேன். அப்படி.. இப்படி என்றெல்லாம் புகழுரைகள் பாடுவதற்கு முன் ஒவ்வோர் இதழ் அட்டைப் படத்தையும் இதழிலே வெளியாகும் ஏதேனுமொரு கதையிலே நிகழும் சம்பவத்திற்கேற்பச் சித்திரித்தால் 'கண்ணன்' பௌர்ணமி சந்திரன் போன்று என்றும் மாறா எழிலோடு விளங்குவான்.

மன்னாதி மன்னர்கள் வீற்றிருக்கும் பிரம்மாண்டமான மண்டபத்திலே புலித்தோல் போர்த்துக்கொண்டு அவர்களுக்கு அருகிலே அமரும் பேறு பெற்ற புலிக்குட்டியார் என்பதே எங்களுள்ளத்திலே இரவும் பகலும் ஓயாது ஒழியாது எழும் கேள்வி.

'கேட்டீர்களா!' பகுதி வழக்கம் போல நன்றாகவே உள்ளது. செல்வி மணிமேகலையைப் போன்று ஊருக்கொருவர் இருந்தால் நாடே

நன்னிலை எய்தும். 'சந்தி வந்தது' துணுக்கு நன்றாக இருக்கிறது.

'யானையின் ஏக்கம்' அரியதொரு நீதியைத் தன்னகத்தே தாங்கியுள்ள சிறந்த கதை. 'ஆடைக்கு விருந்தை'ப் படிக்கும்போது ஈஸ்வர் சந்திர வித்யாஸாகரரைப் பற்றிய இதே கருத்துக்கொண்ட கதை ஒன்று மனத்திரையிலே ஓடுகிறது. எது எதன் நிழல்? 'மறதிப் புரொபஸர்' நல்ல கதை. "தற்பெருமை தனக்கே ஆபத்தாய் முடியும்" என்ற சீரிய கருத்தைக் கொண்ட கதை 'புளியமரத்துப் பிசாசு.'

'தூங்கும் அழகி' கண்ணனிலே கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் பகுதிகளிலே தலைசிறந்து விளங்குகின்றது. கொடுமை, கொலை, கொள்ளை இவை, 'அன்பு' என்ற ஆயுதத்தின் முன் தவிடு பொடியாகும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிறது 'அங்குலிமாலன்.'

'கேளுங்கள் சொல்கிறேன்' பயனுள்ள பகுதி. 'பேராசிரியர் விஞ்ஞானம்' மற்றவர்களைப் போலத் தெரியாததை மழுப்பித் திருப்பாமல் தகுந்த பதிலைத் தருகிறார். 'என் விமர்சனம்' பலே ஜோர்.

அடடா!

உன்னை ஆசிரியர் ஏமாற்றினால்
என்மேல் கோபம் உண்டாவதேன்?
அடடா! அடடா! அடடா!
அடடா! அடடா! அடா! அடா!
சந்தா கட்டியும் பயனில்லை!
சலியாய்ப் படித்தும் பயனில்லை!
ஏங்கி நின்றும் பயனில்லை!
எழுதிக்கேட்டும் பயனில்லை!
(அதனால்) நன்றாய் யோசித்து
அறியணும்
மாதம் மும்முறையாகணும்
(கண்ணன்)
மாதம் மும் முறை யாகணும்
(உன்னை ஆசிரியர்
ஏமாற்றினால் என்மேல் கோபம்
உண்டாவதேன்?)
அடடா! அடடா! அடடா!
அடடா அடடா! அடடா!
அடா! அடா!!

—நா. வைத்தியநாதன், தலையூர்.

பாராட்டக்கூடிய கடிதங்கள்

(1) பி. எல். நாராணன், புதுடில்லி. (2) எம். கைலாசம், ஸ்ரீரங்கம். (3) கே. என். மகாலிங்கம், விஷ்ணுபுரம். (4) வி. சீனிவாசன், சஞ்சீவிராயன் பேட்டை, சேலம். (5) எம். சியாமளகுமாரி, செங்கோட்டை. (6) மா. ஞானம், அன்னசாகரம். (7) ஆர். வி. சீனிவாசன், ராசிபுரம். (8) தே. பார்த்தசாரதி, மயிலாப்பூர், (9) வி. ஆர். பாலன், மருதாவம். (10) ஆர். எஸ். சுப்பிரமணியன், ராசிபுரம். (11) ஜி. ராஜகோபாலன், நாகபுரி. (12) வி. கமலக்கண்ணன், பெரியமெட்டு.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

சென்னை-600 008

கண்ணன் கிளைக் கழகம்

காரைக்கால்	உபதலைவர்கள்:	ராமலிங்கம்
		நா. கந்தசாமி
	காரியதரிசி:	எம். முருகையன்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விளையாட்டுக் கிளப்பும், நூல் நிலையமும், "மாணவர் மஞ்சரி" என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நடைபெறுகிறது. "மாணவர் மஞ்சரி"க்கு விஷயதானம் செய்ய விரும்புபவர்கள் தங்கள் விஷயங்களை நா. கந்தசாமி, நெ. 9. பிரெஞ்சு உபாத்தியாயர் வீதி என்ற விலாசத்திற்கு அனுப்பலாம்.

எட்டையபுரம்	உபதலைவர்: எஸ். சண்பகநாதன்
	நிர்வாகி: பி. பால்ராஜ்
	செயலாளர்: எஸ். நெல்லையப்பன்
	பொக்கிஷதார்: எஸ். குருசாமி
	உதவி பொக்கிஷதார்: ஏ. சொக்கலிங்கம்

ஆறு பேர் கொண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. "மதி" என்ற கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாசகசாலை ஒன்றும் நடைபெறுகிறது.

பாலசமுத்திரத்தில் (பழனி தாலுக்கா): கண்ணன் கிளைக் கழகம் ஸ்தாபிக்க M. சின்னதுரை, காந்திரோடு என்ற விலாசத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4 மணி முதல் 6 மணிவரை அங்கத்தினர்கள் சந்திக்கலாம்.

குழந்தை நடிகை

இவ்வருடம் டில்லி நாட்டிய சங்கத்தாரால் நடத்தப்பட்ட 'ஹம் ஹிந்துஸ்தானி' என்னும் ஹிந்தி நாடகத்தில், சிறந்த குழந்தை நடிகை என்னும் பெயரையும், பரிசாக ஒரு கோப்பையையும் பெற்றிருக்கிறாள் இந்தத் தமிழ் நாட்டுக் குழந்தை லக்ஷ்மி.

எட்டு வயதுள்ள லக்ஷ்மிக்கு ஹிந்தி நன்றாகப் பேசவும் எழுதவும் தெரியும். பஞ்சாபியும் நன்கு பேசத் தெரியும். ஒரு தமிழ் நாட்டுக் குழந்தை ஹிந்தி நாடகத்தில் நடித்துப் முதற் பரிசு பெறுவது நம் எல்லோருக்குமே பெருமை அல்லவா?

சபாஷ் லக்ஷ்மி!

Reg. No. M. 5542

புதிய கண்ணன் வெளியீடுகள்

ஏரிக்கரை மாளிகை

பாட்டி, ராஜா-ராணிக் கதைகள் சொல்வாள்; தாத்தா, மந்திரவாதி - வீரர் கதைகள் சொல்வார். எல்லாம் கேட்கக் கேட்க எங்கேயோ ஒரு தனி உலகத்துக்கு நம்மைக் கொண்டு சென்றுவிடும். ராஜகுமாரன் வருவான்; ராஜகுமாரி வருவாள். வீரன் வருவான்; வாள் கொண்டு சாகஸச் செயல்கள் எல்லாம் செய்வான். அற்புதத்தைச் சாதிப்பான். நாமோ ஆனந்தத்தில் மிதப்போம். அப்படிப்பட்ட புத்தகம்தான் இது. அருமையான படங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

விளையும் பயிர்

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

நம்மிடையே வாழ்ந்த, வாழுகின்ற பெரியோர்கள் உங்களைப் போலிருந்த காலத்தில் எப்படி விளையாடினார்கள்? என்ன என்ன குறும்புத்தனங்கள் செய்தார்கள்? காந்திஜி, நேருஜி, டாகூர், பாரதியார், ராஜேந்திரப் பிரஸாத், ஆஸாத், டாக்டர் சாமிநாதையர் முதலிய பெரியார்களுடைய விளையாட்டுப் பருவத்து நிகழ்ச்சிகளைக் கதைபோல ஆசிரியர் வர்ணிக்கிறார்.

விலை 8 அணா

விஞ்ஞானம் பேசுகிறார்

ஆசிரியர்கள்:

பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

நாம் தினசரி பல பொருள்களை உபயோகப் படுத்துகிறோம். அவை எப்படி வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா? மொத்தம் 12 பொருள்களைப்பற்றி இதில் சித்திரங்களாக விவரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தினம் அரைமணி செலவிட்டால் 12 நாட்களில் தெரிந்து கொண்டுவிடலாம்.

விலை 8 அணா

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.